REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 ஜூலை 27 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
1932 - 2022
வரு. 90 இல. 175 | Wednesday 27, July, 2022 | 12பக்கங்கள் | 40/-

**ஜனாதிபதி ரணிலுக்கு மோடி வாழ்த்து:**

## இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இந்தியா ஆதரவு




தொடர்ந்தும் உதவி நல்கும் எனவும் தெரிவிப்பு

இலங்கையின் நெருங்கிய நண்பராகவும் அண்டை நாடாகவும், இலங்கை மக்களின் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்காக இந்தியா 04

## எரிபொருள் கொள்வனவுக்கு இந்த வருடம் 6.7 பில்.ரூபா செலவாகும்

இலங்கையால் தாங்கிக்கொள்ளக்கூடிய தொகை அல்ல

**எரிபொருளை சிக்கனமாக பாவிக்குமாறு அரசாங்கம் மக்களிடம் கோரிக்கை**

ஷம்ஸ் பாஹிம்

எரிபொருள் கொள்வனவுக்காக இந்த வருடம் மாத்திரம் 6.7 பில்லியன் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை போன்ற சிறிய நாட்டுக்கு இது தாங்கக் கூடியதல்லவென அமைச்சரவை பேச்சாளர் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

எனவே மக்கள் சிக்கனமாக எரிபொருளை பயன்படுத்த வேண்டும் எனவும் QR முறை சரியாக செயற்படுத்தப்படும் 04

**குற்றச்சாட்டை மறுக்கும் அரசாங்கம்:**

## முன்னாள் ஜனாதிபதி கோட்டா தலைமறைவாக இல்லை

உரிய வீஸா பெற்றே வெளிநாடு சென்றுள்ளார்

ஷம்ஸ் பாஹிம்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமறைவாகியுள்ளதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை மறுப்பதாக தெரிவித்த அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன, தேவையான வீஸாவை பெற்றே அவர் வெளிநாடு சென்றுள்ளதாகவும் அவர் 04

**எரிபொருள் ஒதுக்கீட்டை பெறுவதற்கு**

## ஆட்டோ சாரதிகளை அருகிலுள்ள பொலிஸில் பதிய கோரிக்கை

டுவிட்டர் பதிவினூடாக அமைச்சர் கஞ்சன வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம்



முச்சக்கரவண்டி சாரதிகள், தமது பிரதேசத்துக்கு பொறுப்பான பொலிஸ் நிலையத்தில் பதிவை மேற்கொண்டு, எரிபொருள் பெறுவதற்கான ஒரு நிரப்பு நிலையமொன்றை 04

**ஜனாதிபதி செயலகம், மாளிகை, பிரதமர் அலுவலகம், அலரி மாளிகைகளுக்கு**

# சேதம் விளைவித்த 150 பேர் CID யினரால் அடையாளம்

அரச சொத்துக்களை திருடிச் சென்றவர்களும் விரைவில் கைதாவர்

**சட்ட மாஅதிபருடன் கலந்துரையாடியதும் அவர்களை கைது செய்ய நடவடிக்கை**




ஜனாதிபதி மாளிகை, அலரிமாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் என்பனவற்றுக்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த 150 பேரை குற்றப் புலனாய்வு திணைக்களம் தலைமையிலான விசாரணை குழுக்கள் அடையாளம் கண்டுள்ளன.

அடையாளம் காணப்பட்டவர்களுள் ஜனாதிபதி செயலகத்தை உடைத்து சேதப்படுத்திய 55 சந்தேக நபர்களும் பிரதமர் அலுவலகத்தை சேதப்படுத்திய சந்தேக நபர்கள் 15 பேரும் உள்ளனர். ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகை என்பவற்றுக்கு சேதம் விளைவித்தமை மற்றும் அங்கிருந்த சொத்துக்களை திருடியமை தொடர்பில் 80 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் தினங்களில் இவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும், சட்ட மாஅதிபருடன் கலந்தாலோசித்து பொதுச் சொத்துக்கள் சட்டம் மற்றும் தொல்பொருள் சட்டம் போன்றவற்றின் கீழ் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை 04

**சுமார் ரூ.3.4 பில். பெறுமதியான நிவாரணம்:**

## தமிழக அரசின் மனிதாபிமான உதவிகள் இலங்கையிடம் கையளிப்பு



இந்திய தூதுவரினால் கெஹெலியவிடம் வழங்கிவைப்பு

தமிழக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 3.4 பில்லியன் ரூபாவுக்கு மதிகமான மனிதாபிமான உதவிகள் இலங்கை அரசாங்கத்திடம் நேற்று (26) உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

இந்த மனிதாபிமான உதவி, இந்திய உயர்ஸ்தானிகரினால் இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டதுடன், இலங்கை அரசாங்கத்தின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல ஆகியோர் அதனை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

தமிழக அரசினால் 04

**வருமானம் 2.7 பில்.ரூபா; சம்பளம் + OT 10.1 பில். ரூபா**

## ரயில்வே திணைக்களம் பாரிய நஷ்டத்தில் இயங்க யார் காரணம்?

அமைச்சரவை தீர்மான அறிவிப்பு மாநாட்டில் பந்துல கேள்வி

ஷம்ஸ் பாஹிம்



ரயில்வே திணைக்களம் பாரிய நஷ்டத்தில் இயங்குவதோடு 2021 இல் மொத்த வருமானம் 2.7 பில்லியன்களாக இருந்தது. நஷ்டம் 47 பில்லியன்களாக பதிவாகியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். இதில் சம்பளம் வழங்க 7.8 பில்லியனும் மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்க 2.3 பில்லியன்களும் செலவிடப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர், மேலும் 04

**வாகனங்களுக்கு விநியோகிக்கும்**

## எரிபொருளின் அளவை அதிகரிக்க தீர்மானம்



QR முறையின் கீழ் பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு வாராந்தம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருவதால் அதன் அளவை அதிகரிப்பதற்கு எரிசக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, மோட்டார் சைக்கிள்களுக்கு 04 லீற்றராகவும், முச்சக்கரவண்டிகளுக்கு 05 லீற்றராகவும், வேன்கள் /கார்களுக்கு 20 லீற்றராகவும், லொறிகளுக்கு 50 லீற்றராகவும் அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

## சட்ட விரோத செயற்பாடுகளுக்கு கால அவகாசம் வழங்க முடியாது

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்துக்குள் பிரவேசித்தமை சட்ட விரோதமானது. சட்ட விரோத செயற்பாடுகளுக்கு கால அவகாசம் வழங்க முடியாதென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். காலி முகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களை ஜனாதிபதி செயலகத்திலிருந்து வெளியேற்றியமை தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டு வரும் நிலையில், சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பது பொலிஸாரின் பொறுப்பென்றும் பொலிஸ் ஊடகப் 04

## தேசிய அரசாங்கம் தொடர்பில் அதிகாரபூர்வ அழைப்பு இல்லை


இதுவரை அரசிடமிருந்து எவருக்கும் கிடைக்கவில்லை



தேசிய அரசு அல்லது சர்வ கட்சி அரசு அமைப்பது தொடர்பில், அரசாங்கத்திடமிருந்து எமக்கு இதுவரை அதிகாரபூர்வ அழைப்பு எதுவும் வரவில்லையென தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார். அத்துடன் ஏனைய எதிர்கட்சிகளுக்கும் அதிகாரபூர்வ அழைப்புகள் வரவில்லை. ஆகவே அதற்குள் "பேச்சுக்கள் நடக்கின்றன; அமைச்சர்கள் ஆகிறார்கள்" என்பவையெல்லாம் வெறும் சுவாரசிய செய்திகளாக மட்டுமே இருக்கின்றன. ஆனால், நாடு இன்று இருக்கும் அவதி நிலையில், 04

## கிரிபத்கொட ஆஸ்பத்திரியில் ஏழு பேருக்கு கொரோனா

கம்பஹா மாவட்டம் அபாய நிலையில்



கிரிபத்கொடை வைத்தியசாலை ஊழியர்களில் 07 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்கள் ராகமை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது கம்பஹா வைத்தியசாலையில் 05 கொரோனா நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாகவும், பல மாதங்களாக மூடப்பட்டிருந்த கொரோனா விடுதிகள் மீண்டும் சிகிச்சையை 04

**முகநூல் பயன்படுத்தும் நபர்கள்**

## வெறுப்புணர்வு தூண்டும் பதிவுகள் இட்டால் கைது

பொலிஸார் அவசர எச்சரிக்கை

சமூக வலைத்தளங்களில் குறிப்பாக முகநூலில் வெறுக்கத்தக்க மற்றும் வெறுப்புணர்வை ஏற்படுத்தும் பதிவுகள் செய்தால் கைது செய்யப்படுவரென பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சமூக ஊடகங்கள் ஊடாக வெறுக்கத்தக்க மற்றும் வெறுப்புணர்வை தூண்டும் பதிவுகள் மற்றும் கருத்துக்களை பரப்பியமைக்காக சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. 04

## பண்டாரநாயக்க சிலையின் அருகில் நின்ற 4 பேர் கைது

நீதிமன்ற உத்தரவை மீறியதாக குற்றச்சாட்டு

லோரன்ஸ் செல்வநாயகம்



நீதிமன்ற உத்தரவை மீறி, காலி முகத்திடலிலுள்ள முன்னாள் பிரதமர் அமரர் பண்டாரநாயக்கவின் உருவச் சிலைக்கருகில் நின்று கொண்டிருந்த 04 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வாக்குமூலங்களை பதிவு செய்வதற்காக இவர்கள் கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 04



சர்வகட்சி அரசில் இணையுமாறு சகல

**தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கும் பிரதமர் தினேஷ் அழைப்பு** 02

எதிரணி மற்றும் மக்களது கேள்விகளுக்கு பதிலளிக்க

**பாராளுமன்றில் அமைச்சர்களது பிரசன்னம் இனிமேல் கட்டாயம்**

ஜனாதிபதி ரணில் அறிவுறுத்து 02



**பாராளுமன்றத்தில் இன்று அவசர கால நிலை விவாதம்** 02

## வஜிர அபேவர்தன இன்று எம்.பியாகிறார்



**சபையில் சத்தியப்பிரமாணம் செய்வார்**

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதை தொடர்ந்து பாராளுமன்றில் ஏற்பட்டுள்ள எம்.பி வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராக அவர் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார்.

## எரிபொருள் நெருக்கடிக்கு அரசிடம் தீர்வு கிடையாது

திட்டம் இல்லையென திஸ்ஸMP குற்றச்சாட்டு



எரிபொருள் நெருக்கடியை தீர்ப்பதற்கான தெளிவான திட்டம் அரசாங்கத்திடம் இல்லையென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

QR குறியீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அதன் அடிப்படையிலான எரிபொருளை பொதுமக்கள் 04

## தங்கம், வலம்புரி சங்கு இந்தியாவுக்கு கடத்தல்

பேசாலையில் மூவர் கைது



சட்டவிரோதமான முறையில் நாட்டிலிருந்து 09 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய தங்கக் கட்டியை கடத்த முயற்சி செய்த 03 சந்தேக நபர்கள் பேசாலையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார், பேசாலை, குருசபாடு பகுதியில் இலங்கை கடற்படை யினர் திங்கட்கிழமை(25) இரவு கடற்கரையில் தேடுதல்களை நடத்தினர். இதன்போது 04

**அமைச்சராக இருந்த போது மோசடி:**

## ராஜிதவின் வழக்கை மீளப்பெற்றது CID



முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிரான மோசடி வழக்கு குற்றப்புலனாய்வு திணைக்களம் மீளப்பெற்றுக் கொண்டுள்ளது.

ராஜித சேனாரத்ன கடந்த 2010 முதல் 2015 வரை, மஹிந்தவின் இரண்டாவது பதவிக் காலத்தில் கடற்றொழில் , நீரியல் வளங்கள் அமைச்சராக பணியாற்றினார்.

பதவிக்காலத்தில், அவரது செயலாளர் ஒருவரின் பெயரில் சீனாவிலிருந்து 08 கப்பல்களை தருவித்துள்ளதாகவும், 04

## தமிழர் ஒருவருக்கு கனடாவில் அதிஷ்டம்

சீட்டிழுப்பில் மிகப்பெரிய பரிசு




தமிழர் ஒருவருக்கு கனடாவில் லொத்தர் சீட்டிழுப்பில் மிகப்பெரிய பரிசு விழுந்துள்ளது. அஜக்ஸ் நகரை சேர்ந்தவர் ஜீவகுமார் சிவபாதம் (54) என்பவருக்கு லொட்டோ மேக்ஸ் சீட்டிழுப்பில் சுமார் 13 கோடி ரூபா (கனேடிய $500,000) (ரூ.13,90,25,573.10) பரிசு கிடைத்துள்ளது.

இந்த தகவலை Ontario Lottery and Gaming Commission 04

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜூலை 27 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்

24 முதல் 29 வரை
சுபஹ் - 04.42
லுஹர் - 12.18
அஸர் - 03.42
மஃரிப் - 06.31
இஷா - 07.46

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் ஆடி 11

ராகுகாலம் : பகல் : 9.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 9.00 - 10.30வரை

யோகம்: சதுர்த்தசி

திதி: சதுர்த்தசி

# இலங்கை – இந்தியாவுக்கிடையே வெளிநாட்டு நேரடி முதலீடுகள்

## பிரதமர் தினேஷ் – இந்திய உயர்ஸ்தானிகர் நேற்றைய சந்திப்பில் கலந்துரையாடல்



இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயான வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் சுற்றுலாத் துறையில் விரைவான முதலீடுகள் குறித்து பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகருக்குமிடையே நேற்று விரிவான கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்குமிடையிலான சந்திப்பு நேற்று (26) பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற போதே இவ்வாறு கலந்துரையாடப்பட்டுள்ளது.

பிரதமரின் விசேட கோரிக்கையின் பிரகாரம், நாட்டில் புதுப்பிக்கத்தக்க மின்சக்தித்துறை மற்றும் புகையிரதம் உட்பட போக்குவரத்து அமைப்பின் வளர்ச்சிக்கு தேவையான தொழில்நுட்ப ஆதரவை வழங்க இந்திய உயர்ஸ்தானிகர் இணக்கம் தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார சவால்களுக்கு முகம்கொடுத்து இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கிய பங்களிப்புகளுக்கும் எதிர்வரும் காலங்களில் வழங்கவிருக்கும் பங்களிப்புகளுக்கும் பிரதமர் தினேஷ் இதன்போது நன்றி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையே காலம் காலமாக இருந்து வரும் இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இங்கு ஆலோசிக்கப்பட்டது.

புதிய இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு பதவியேற்றதற்கு பிரதமர் தினேஷ் குணவர்தன வாழ்த்து தெரிவித்தார். இந் நிகழ்வில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்கவும் கலந்துகொண்டார்.

# மக்களுக்கு மருந்து வகைகளை தட்டுப்பாடின்றி வழங்கவும்

## அதிகாரிகளுக்கு அமைச்சர் கெஹெலிய பணிப்பு



மக்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை தட்டுப்பாடின்றி வழங்குவதற்கான செயற்திட்டத்தை முறைப்படி முன்னெடுக்குமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மருந்து இறக்குமதியை நிர்வகிப்பது தொடர்பில் சுகாதார திணைக்கள அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் மருந்து உற்பத்தியை விரைவுபடுத்துவதற்கு தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதால், அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடி அதற்கான நடைமுறைகளை தயாரிக்குமாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

உலக வங்கியினால் சுகாதாரத்துறைக்கு ஒதுக்கப்பட்ட 23 மில்லியன் டொலர்களில் இதுவரை 18.6 மில்லியன் டொலர்கள் பெறப்பட்டுள்ளமை இந்த கலந்துரையாடலின் போது தெரியவந்துள்ளது.

# ஆடி அமாவாசை கொழும்பு காக்கை தீவில்

## பிதிர் கடன் தீர்க்க ஏற்பாடு

ஆடி அமாவாசை தினமான நாளை (28) வியாழக்கிழமை காலை 6.00 மணி தொடக்கம் பகல் 12.00 மணி வரை கொழும்பு காக்கைதீவு களனி சங்கமத்தில் பிதிர் கடன்களை செய்வதற்கு கொழும்பு காக்கைதீவு இந்து மன்றத்தினர் சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளதாக அறிவித்துள்ளார்கள். கடல் அலை இந்நாட்களில் கடுமையாக இருப்பதாலும் மண்ணரிப்பினால் பிதிர் கடன் செய்யும் பிரதேசம் சிறியதாக காணப்படுவதாலும் பிதிர் கடன் செலுத்துவோர் தங்களுடைய பாதுகாப்பினை கருத்திற்கொண்டு தீர்த்தமாடி செல்லும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பிதிர்க்கடன் தீர்ப்போரின் பாதுகாப்பிற்காக கடற்படை சுழியோடிகள் கடமையில் ஈடுபடுவார்கள் எனவும் கொழும்பு காக்கைதீவு இந்து மன்றத்தினர் தெரிவித்துள்ளனர்.

# காலாவதியான சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு மேலும் சலுகை காலம்

**ஷம்ஸ் பாஹிம்**



காலாவதியானசாரதி அனுமதிப்பத்திரத்திரங்களுக்கான செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கென அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்க இருப்பதாக அமைச்சவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு சலுகைக் காலம் வழங்குவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுமா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் குறிப்பிட்டதாவது,

இது தொடர்பில் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை

04

சர்வகட்சி அரசில் இணையுமாறு சகல

# தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கும் பிரதமர் தினேஷ் அழைப்பு



“நாட்டை மீட்டெடுக்க சர்வகட்சி அரசே தேவையானது. அனைத்துத் தமிழ், முஸ்லிம் கட்சிகளும் தமது கட்சிகளை வளர்ப்பதை விடுத்து சர்வகட்சி அரசில் இணைந்து நாட்டை வளப்படுத்த வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

“தற்போதைய ஆட்சியில் சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என்ற பேதம் இருக்கக் கூடாது. அதேவேளை சிறுபான்மைக்கட்சியினர், பெரும்பான்மையினக் கட்சியினர் என்ற பேதமும் இருக்கக் கூடாது.

தமிழ் – முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் அனைத்தும் தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டும். அரசுக்கு முழுமையான ஆதரவை வழங்கவேண்டும். நாடு தற்போது நெருக்கடியான நிலைமையைச் சந்தித்துள்ளது. அதிலிருந்து மீண்டு எழ வேண்டும்.

இந்த நிலைமையில், மக்கள் பிரதிநிதிகள் தங்களுடைய கட்சிகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொள்ளாமல் நாட்டினதும் மக்களினதும் நலன் கருதி தீர்க்கமான முடிவு எடுத்து சர்வகட்சி அரசுக்கு ஆதரவு வழங்கவேண்டும்” என்றார்.



# கொரோனா பரவல் அதிகரிப்பு முகக்கவசம் அணிவது கட்டாயம்

## சுகாதார அமைச்சு அறிவுறுத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் கொரோனா தொற்று பரவல் வேகம் மீண்டும் அதிகரித்து வருவதையடுத்து நாட்டு மக்கள் அனைவரும் முகக் கவசம் அணிந்து கொள்வது கட்டாயமென சுகாதார அமைச்சு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தனவின் கையெழுத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், தற்போதைய கொரோனா தொற்று பரவல் சூழ்நிலையை கவனத்திற்கொண்டு பொதுஇடங்கள், பொதுப் போக்குவரத்து, குடியிருப்பு பிரதேசங்கள் உள்ளிட்ட பகுதிகளில் கண்டிப்பாக மக்கள் முகக் கவசத்தை அணிந்துகொள்ள

04

# பாராளுமன்றத்தில் இன்று அவசர கால நிலை விவாதம்



பாராளுமன்றம் இன்று மு.ப 10.00 மணிக்குக் கூடவிருப்பதுடன், பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதில் ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசர கால நிலைமை அறிவிப்பு பி.ப 4.30 மணி வரை விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவுள்ளது.

2022 ஜூலை 17 ஆம் திகதிய 2288/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அப்போதைய பதில் ஜனாதிபதியினால் இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டதுடன், சட்ட விதிகளுக்கு அமைய அவசரகால நிலைமைப் பிரகடனம் 14 நாட்களுக்குள் பாராளுமன்றத்தின் அனுமதி பெறப்படாவிட்டால் இது இரத்தாகிவிடும்.

இலங்கையில் மக்கள் அவசர கால நிலைமை நிலவுவதன் காரணமாக பொது மக்களின் பாதுகாப்பு, நாட்டின் அமைதியைப் பாதுகாத்தல், பொதுமக்கள் வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்கள் மற்றும் சேவைகள் என்பவற்றைப் பேணுவதற்குப் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டிருப்பதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.




எதிரணி மற்றும் மக்களது கேள்விகளுக்கு பதிலளிக்க

# பாராளுமன்றில் அமைச்சர்களது பிரசன்னம் இனிமேல் கட்டாயம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்து

**ஷம்ஸ் பாஹிம்**



எதிரணியினரின் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு அமைச்சர்கள் கட்டாயம் பாராளுமன்றத்துக்கு சமுகமளிக்க வேண்டுமென சகல அமைச்சர்களுக்கும் ஜனாதிபதி அறிவித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

எதிர்க்கட்சிகளினதும் மக்களினதும் பிரச்சினைகளுக்கும் கேள்விகளுக்கும் பதிலளிப்பதற்காக அனைத்து அமைச்சர்களும் பாராளுமன்றம் நடைபெறும் தினங்களில் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டுமெனவும் எழுப்பப்படும் கேள்விகளுக்கு சபை முதல்வர் அன்றி குறிப்பிட்ட அமைச்சர்களே பதில் வழங்க வேண்டுமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

நிலையியற் கட்டளைகளுக்கு அமைவாக ஆளும் தரப்பு செயற்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு தன்னாமுனையில்

# டிப்பர் மோதி கோர விபத்து

## இரு சகோதரர்கள் ஸ்தலத்தில் பலி



மட்டக்களப்பு தன்னாமுனையில் நேற்று (26) மாலை ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

மட்டக்களப்பு – திருகோணமலை நெடுஞ்சாலையின் தன்னாமுனை பகுதியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

பலியானவர்கள் சத்துருகொண்டான் கிராமத்தைச் சேர்ந்த இரு சகோதரர்கள் எனவும். ரிப்பர் ரக வாகனம் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

# ஜனாதிபதி தலைமையில் சர்வகட்சி அமைப்பதற்கான பேச்சு ஆரம்பம்

**ஷம்ஸ் பாஹிம்**



சர்வகட்சி அரசாங்கம் உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தைகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிநடத்தலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதன் முன்னோடியாக ஐ.தே.க தலைவர் ஜனாதிபதியாகவும் மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஷ் குணவர்தன பிரதமராகவும் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், ஏனைய கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதென்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாடு நேற்று தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கான முன்னெடுப்பு குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் குறிப்பிட்டதாவது.

சர்வகட்சி அரசாங்கம் ஜனாதிபதிதான் பேச்சுவார்த்தைகளை வழிநடத்துகிறார். ஏனைய தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நெருக்கடி நிலைமையில் சர்வகட்சி உடன்பாடு பிரதானமானது.அதற்கு இந்த உடன்பாடு முக்கியமானது.

அரசின் வருமானம் 400 கோடியாகவும் செலவு 1000 கோடியாகவும் இருக்கும் இன்றைய காலகட்டத்தில் அரச நிதி தொடர்பில் உடன்பாடு ஏற்பட வேண்டும். அது போன்றே சர்வகட்சி அமைத்து உடன்பாடுகளுடன் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும். அதற்கான பேச்சுவார்த்தைகள்

04

வெள்ளவத்தையில்

# பிதிர்க்கடன் செலுத்தல்

இந்து சமயத்தின் முக்கிய விரதங்களுள் ஒன்றான ஆடி அமாவாசை விரதம் நாளை 28 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. நீர்நிலைகளில், குறிப்பாக கடற்கரைகளிலேயே இவ் விரதத்துக்கான தர்ப்பண வழிபாட்டு முறைகளை நிறைவேற்றுவது வழக்கம். கொழும்பு வாழ் மக்கள் கடந்த பல வருடங்களாக கொழும்பு 06 வெள்ளவத்தையில் அமைந்துள்ள புகையிரத நிலையத்துக்கருகே (மியாமிக்கு எதிர்ப்புறம்) உள்ள கடல் சங்கமத்திலேயே இவ் வழிபாடுகளை நிகழ்த்திவந்துள்ளனர்.

இவ்வருடமும் அதேபோல் கொவிட்19

04

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### ரூ.50,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

17.00% 2025 ''A'' தொடர்களின் கீழ் ரூ. 20,000 மில்லியனையும், 18.00% 2031 ''A'' தொடர்களின் கீழ் ரூ. 30,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2022 யூலை 28ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 17.00% 2025 ''A'' | 18.00% 2031 ''A'' |
|---|---|---|
| ISIN* | LKB00425F013 | LKB00931E153 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 20,000 மில்லியன் | ரூ. 30,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 17.00% ஆண்டொன்றிற்கு | 18.00% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2021 யூன் 01 | 2022 மே 15 |
| **முதிர்வுத் திகதி** | **2025 யூன் 01** | **2031 மே 15** |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 01 யூன் & 01 திசெம்பர் | 15 மே & 15 நவெம்பர் |
| ஒன்றுசேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 2.8333 | ரூ. 100 இற்கு ரூ. 3.8152 |
| ஏல விற்பனைத் திகதி | 2022 யூலை 28, வியாழக்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2022 யூலை 28, வியாழக்கிழமை மு.ப. 11.00 மணி | |
| **தீர்ப்பனவுத் திகதி** | **2022 ஓகத்து 01** | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (தொடர்கள் வழங்கப்பட்ட நாளிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட மின்னியல் வலையமைப்பின் முறைகளினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வொரு தொடர்/ ISIN தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல் கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்வெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் லிமிடட் | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம். ஆசீம்**
பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர் / பதிவாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்,
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## வர்த்தக அமைச்சு
## கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்

### சதொச தலைமை அலுவலகத்தில் 02 பயணிகள் மின்னுயர்த்தியைக் கழற்றி அப்புறப்படுத்துதல் மற்றும் மீண்டும் விற்பனை செய்வதற்காக விலைமனு கோரல்

இல. 27, வொக்ஷோல் வீதி, கொழும்பு- 02 எனும் இடத்தில் 10 மாடிக்கான 02 பயணிகள் மின்னுயர்த்தியை கழற்றி அப்புறப்படுத்தி அதை மீண்டும் விற்பனை செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. (கொள்வனவாளரின் செலவில் கழற்றி அப்புறப்படுத்துதல் வேண்டும்).

விண்ணப்பப் படிவத்தின் பொருட்டு 1000.00 ரூபா வீதம் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி சதொச தலைமை அலுவலகத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து கேள்வி விண்ணப்பப் படிவங்கள் மற்றும் நிபந்தனைகள் சகிதம் விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி விண்ணப்பப் படிவங்களை 2022-08-15ஆம் திகதி மு.ப. 12.00 மணிக்கு முன் 03ஆம் இலக்க கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் அவ்வேளையிலேயே கேள்விப் படிவங்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

அலுவலக மின்னுயர்த்தியை 2022-07-27ஆம் திகதி முதல் 2022-08-12ஆம் திகதி வரை அலுவலக வேலை நேரங்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.

கேள்விப் படிவங்களைப் பரீட்சித்துப் பார்க்கும் போது 25,000.00 ரூபா மீளளிக்கப்படும் கேள்வி வைப்பொன்றை 2022-08-15ஆம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும்.

கேள்விக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்,**
**இல. 27, வொக்ஷோல் வீதி.**

திகதி 25.07.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4827
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,244,640.00
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 7 4 7 3 1 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,261,545.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 136
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,887,820.00
இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 12 24 26 46
விசேட இலக்கினம் விருச்சிகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,347,372.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 857
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,903,480.00
வெற்றி இலக்கினம் R வெற்றி இலக்கங்கள் 02 32 36 53
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 118,953,551.20

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3069
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,305,420.00
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 01 50 63 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,129,491.20

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1305
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,483,380.00
வெற்றி இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 7 1 2 4 5 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,542,600.40

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1175
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,187,140.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 262,328,654.00
ஆங்கில எழுத்து V சுப்பர் நம்பர் 02 வெற்றி எண்கள் 46 49 64 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

## 1988 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் (மீளமைக்கப்பட்ட) 74வது பிரிவின் கீழ் செய்யப்பட்ட அறிவிப்பு

1988 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 72 மற்றும் 73ஆம் பிரிவுக்கமைவாக (திருத்தப்பட்டவாறான) 2021 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு 10 ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்காக கணக்கினைத் தொழிற்படுத்துவதற்கு இயலாத காரணத்தின் விளைவாக வாடிக்கையாளர்களினால் "கைவிடப்பட்டவை" ஆக பின்வரும் பதிவுகள் கருதப்பட்டுள்ளன.

| கிளையின் பெயர் | கிளையின் தொடர்பு இலக்கம் | நடைமுறைக் கணக்குகளின் எண்ணிக்கை | சேமிப்புக் கணக்குகளின் எண்ணிக்கை | வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் எண்ணிக்கை | பாதுகாப்புப் பெட்டகங்களின் (Lockers) எண்ணிக்கை | உரிமை கோரப்படாத வரைவுகள் / சாதனங்கள் |
|---|---|---|---|---|---|---|
| சிட்டி கிளை (யோர்க் வீதி) | 0114738902 | இல்லை | 992 | 10 | இல்லை | இல்லை |
| கொள்ளுபிட்டி | 0114622181 | இல்லை | 104 | 9 | இல்லை | இல்லை |
| ஸ்ரீ சங்கராஜ | 0114720092 | இல்லை | 204 | 12 | இல்லை | இல்லை |
| கண்டி | 0814471701 | இல்லை | 121 | 15 | இல்லை | இல்லை |
| வெள்ளவத்தை | 0114519772 | இல்லை | 91 | 3 | இல்லை | இல்லை |
| கோபரேட் கிளை(யூனியன் பிளேஸ்) | 0114313201 | இல்லை | 245 | 15 | இல்லை | இல்லை |
| நீர்கொழும்பு | 0314874306 | இல்லை | 292 | 2 | இல்லை | இல்லை |
| புறக்கோட்டை | 0114627777 | இல்லை | 55 | 2 | இல்லை | இல்லை |
| மஹாபாகே | 0114818580 | இல்லை | 120 | 3 | இல்லை | இல்லை |
| பத்தரமுல்ல | 0114412118 | இல்லை | 86 | 8 | இல்லை | இல்லை |
| கறுவாத்தோட்டம் | 0114889830 | இல்லை | 100 | 14 | இல்லை | இல்லை |
| குருநாகல் | 0374690461 | இல்லை | 145 | 2 | இல்லை | இல்லை |
| மஹாரகம | 0114309134 | இல்லை | 70 | 7 | இல்லை | இல்லை |
| மொரட்டுவை | 0114203042 | இல்லை | 98 | 5 | இல்லை | இல்லை |
| பொரளை | 0114616265 | இல்லை | 56 | 5 | இல்லை | இல்லை |
| கிரிபத்கொடை | 0114820381 | இல்லை | 102 | 4 | இல்லை | இல்லை |
| பாணந்துறை | 0384281802 | இல்லை | 61 | 1 | இல்லை | இல்லை |
| கம்பஹா | 0334670773 | இல்லை | 124 | 1 | இல்லை | இல்லை |
| கொட்டாஞ்சேனை | 0114618721 | இல்லை | 46 | 5 | இல்லை | இல்லை |
| வாட் பிளேஸ் | 0114719933 | இல்லை | 52 | 3 | இல்லை | இல்லை |
| கடவத்தை | 0114817700 | இல்லை | 77 | 2 | இல்லை | இல்லை |
| கிறெஸ்கெற் | 0114741333 | இல்லை | 34 | 2 | இல்லை | இல்லை |
| தெஹிவளை | 0114203001 | இல்லை | 46 | 2 | இல்லை | இல்லை |
| மிலெனியம் | 0114955399 | இல்லை | 70 | 2 | இல்லை | இல்லை |
| ஹெவ்லொக் நகரம் | 0114542011 | இல்லை | 84 | 2 | இல்லை | இல்லை |
| பேராதனை | 0814930653 | இல்லை | 41 | 9 | இல்லை | இல்லை |
| நாவல | 0114885501 | இல்லை | 70 | 7 | இல்லை | இல்லை |
| மாத்தறை | 0414928971 | இல்லை | 116 | 3 | இல்லை | இல்லை |
| காலி | 0917857062 | இல்லை | 255 | 2 | இல்லை | இல்லை |
| தலவதுகொடை | 0114412553 | இல்லை | 41 | 2 | இல்லை | இல்லை |
| ஹோமாகம | 0117857303 | இல்லை | 47 | 2 | இல்லை | இல்லை |
| பண்டாரவளை | 0577857103 | இல்லை | 56 | 1 | இல்லை | இல்லை |
| வவுனியா | 0244924800 | இல்லை | 155 | இல்லை | இல்லை | இல்லை |
| மட்டக்களப்பு | 0657857101 | இல்லை | 81 | இல்லை | இல்லை | இல்லை |
| யாழ்ப்பாணம் | 0214920283 | இல்லை | 81 | இல்லை | இல்லை | இல்லை |
| ஹொரனை | 0344947419 | இல்லை | 85 | இல்லை | இல்லை | இல்லை |
| கல்முனை | 0674923007 | இல்லை | 82 | இல்லை | இல்லை | இல்லை |
| மாலபே | 0117857668 | இல்லை | 30 | இல்லை | இல்லை | இல்லை |
| அனுராதபுரம் | 0254928634 | இல்லை | 94 | இல்லை | இல்லை | இல்லை |
| பிலியந்தலை | 0114339434 | இல்லை | 23 | 1 | இல்லை | இல்லை |
| இரத்தினபுரி | 0454927931 | இல்லை | 55 | இல்லை | இல்லை | இல்லை |
| நுவரெலியா | 0527857101 | இல்லை | 95 | இல்லை | இல்லை | இல்லை |
| சிலாபம் | 0324929680 | இல்லை | 31 | இல்லை | இல்லை | இல்லை |
| உலக வர்த்தக மையம் | 0114365184 | இல்லை | 34 | 1 | இல்லை | இல்லை |
| வத்தளை | 0114812621 | இல்லை | 76 | 6 | இல்லை | இல்லை |
| கல்சிசை | 0114210554 | இல்லை | 60 | 13 | இல்லை | இல்லை |
| நுகேகொடை | 0114300450 | இல்லை | 107 | 7 | இல்லை | இல்லை |
| கொஹுவல | 0114200556 | இல்லை | 65 | 3 | இல்லை | இல்லை |
| நிதி திணைக்களம் | 0114682314 | இல்லை | 26 | இல்லை | இல்லை | இல்லை |
| அட்டை நிலையம் | 0114682351 | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | 307 |
| கட்டண சேவைகள் | 0114682102 | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | 30 |

தனிப்பட்ட வாடிக்கையாளர் கணக்குகள் / கைவிடப்பட்ட சொத்தாக வகைப்படுத்தப்பட்ட பொருட்களின் விவரங்கள் கைவிடப்பட்ட சொத்தின் பாதுகாப்பு கருதி வெளியிடப்படவில்லை. ஏனெனில் இதுபோன்ற தகவல்களைப் பயன்படுத்தி தகுதியற்ற நபர்கள் சொத்தின் உரிமையைக் கோருவதற்கு முற்படலாம்.

சொத்துக்கள் கைவிடப்பட்டதாக அறிக்கையிடப்பட்ட சகல வாடிக்கையாளர்களினதும் இறுதியாக அறியப்பட்ட முகவரிக்கு அத்தகைய சொத்துக்களின் விபரங்கள் தொடர்பில் அறிவுறுத்தல் உள்ளடங்கிய ஒரு தனிப்பட்ட அறிவித்தலை நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பி.எல்.சி ஏற்கனவே அனுப்பியுள்ளது.

கணக்கு வைத்திருப்பவர்கள் / அவர்களின் பின்னுரித்தாளர்கள் இந்த அறிவிப்பின் திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் அந்தந்த கிளை முகாமையாளர்களிடம் தங்கள் கோரிக்கைகளை (ஏதேனும் இருந்தால்) முன்வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பி.எல்.சி-PQ118/பிச் ரேடின் A(lka)
இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2
நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

NationsTrustBank

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூளவள முகாமை திணைக்களம்
கரையோர பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி
இராஜாங்க அமைச்சு

## விலை மனுக்கோரல் (IFB)

### PVC பூசப்பட்ட அதிக அளவில் கால்வனேற்றப்பட்ட கேபியன் பெட்டிகள் மற்றும் நெய்யப்படாத ஜியோடெக்ஸ்டைல்களை வழங்குதல்

**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூளவள முகாமை திணைக்களத்தின்** சார்பாக திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவர், கடலோரப் பாதுகாப்புப் பணிகளுக்காக PVC பூசப்பட்ட அதிக அளவில் கால்வனேற்றப்பட்ட கேபியன் பெட்டிகள் மற்றும் நெய்யப்படாத ஜியோடெக்ஸ்டைல்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

**ஒவ்வொரு கொள்முதல் தனிப்பட்ட மற்றும் சுயாதீனமான கொள்முதல் நடவடிக்கையாகும்.**

| ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | வழங்களின் விபரம் | மனுப்பாதுகாப்பு (ரூ). மற்றும் மனுக்கள் செல்லுபடியாகும் காலம் | வழங்கல் காலம் (அதிகபட்ச) | மனுக்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| PVC பூசப்பட்ட அதிக அளவில் கால்வனேற்றப்பட்ட கேபியன் பெட்டிகளை வழங்கல் **CCD/CD/2022/51- Vol II)** | 500Nos of nos. gabions boxes in the size of 1m x 1m x 1m | 100,000/= 77 நாட்கள் | 75 நாட்கள் | 2022.08.18 14.00 மணி |
| நெய்யப்படாத ஜியோடெக்ஸ்டைல்களை வழங்குதல் **CCD/CD/2022/52-Vol II)** | Supply of 26,000m$^2$ of non - woven geotextile | 200,000/= 77 நாட்கள் | 90 நாட்கள் | 2022.08.18 14.30 மணி |

விலை மனுக்கள் **தேசிய போட்டிமுறை மனுக்கோரல் முறையில் இடம்பெறும்.** ஒவ்வொரு கொள்முதல் நடவடிக்கைகளுக்கும் தனி மனு ஆவணம் வழங்கப்படும்.

ஒப்பந்தத்திற்கு தகுதியுடைய மனுதாரர்களின் பெயர் கருப்புப்பட்டியலில் (Black Listed) இடம் பெறாதிருத்தல் மற்றும் 1987 இலக்கம் 03 ஆம் ஒப்பந்தச் சட்டத்தின்படி, மனுவினைப் பெற்றுக்கொள்வதற்கு நிறுவனப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக தகவல்களை **சிரேஷ்ட பொறியியலாளர், (கரையோர அபிவிருத்தி)** மற்றும் மனு ஆவணங்களை **வேளைநாட்களில் மு.ப.09.00 மணி முதல் பி.ப.15.00** மணிவரை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

**பணிப்பாளர் நாயகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூளவள முகாமை திணைக்களத்திற்கு** எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பித்து மற்றும் மீள்செலுத்தப்படாத கட்டணமாக **(ரூ.3,500.00)** னை திணைக்களத்தின் பொருளாளரிடம் செலுத்துவதன் மூலம் ஆங்கில மொழியிலான மனு ஆவணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

மனு ஆவணங்கள் **2022.07.27** முதல் **2022.08.17** வரை **0900 மணி முதல் 1500 மணி** வரை வேலை நாட்களில் மட்டுமே வழங்கப்படும். **2022.08.18** ஆம் திகதி **1400** மணிக்கு அல்லது அதற்கு முன் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

மூடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கத்தினை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் மனுக்கள் திறக்கப்படும். தாமதமாக கிடைக்கப்பெறும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

மேலே குறிப்பிடப்பட்ட முகவரியானது :

**சிரேஷ்ட பொறியிலாளர், (கரையோர அபிவிருத்தி),**
**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூளவள முகாமை திணைக்களம்,**
**நான்காம் மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை,**
**கொழும்பு 10,**
**இலங்கை.**
**தொலைபேசி : +94 11 2472622**
**தொலைநகல் : +94 11 2438005**

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு,
கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூளவள முகாமை திணைக்களம்

## பண்டாரநாயக்க சிலையின்...

காலி முகத்திடல், ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக, பண்டாரநாயக்க சிலை அமைந்துள்ள இடத்திலிருந்து 50 மீற்றர் சுற்றுப்புறத்தில், எந்தவொரு தரப்பினரும் பிரவேசிக்கக் கூடாதென கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, கடந்த 20ஆம் திகதி உத்தரவைப் பிறப்பித்திருந்தார். சிலையை சேதப்படுத்துவதற்கான, திட்டமொன்று இருப்பதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக கோட்டை பொலிஸ் நிலைய அதிகாரிகள் விடுத்த கோரிக்கைக்கமையவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## முன்னாள் ஜனாதிபதி கோட்டா...

குறிப்பிட்டார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

சிங்கப்பூருக்கு தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ள முன்னாள் ஜனாதிபதியை கைது செய்யுமாறு கோரப்பட்டுள்ளதாகவும் அவருக்கு அமெரிக்காவும் வீஸா தர மறுத்துள்ளதாகவும் கேள்வி எழுப்பப்பட்டது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அவர் மீண்டும் நாட்டுக்கு வர இருப்பதாக அறிகிறேன்.அவருக்கு எந்த பிரச்சினையும் ஏற்படாதிருக்க தேவையான நடவடிக்கைகளை எமது நாட்டு அதிகாரிகள் மேற்கொள்வரென எதிர்பார்க்கிறேன் என்றார். (பா)

## ஆட்டோ சாரதிகளை அருகிலுள்ள...

ஒதுக்கிக்கொள்ளுமாறு அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர கோரியுள்ளார். டுவிட்டர் பதிவொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் இதற்கான பதிவை செய்து கொள்ளுமாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல், பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாத்திரமே எரிபொருள் பெற முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் விவசாய உபகரணங்கள், மின்பிறப்பாக்கிகள் மற்றும் ஏனைய உபகரணங்களை பயன்படுத்துபவர்கள் அந்தந்த பிரதேச செயலகங்களில் பதிவு செய்ய முடியும்.

தங்களது வாராந்த எரிபொருள் தேவை தொடர்பான தகவல்களுடன் இவ்வாறு பதிவு செய்து ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தை ஒதுக்கிக் கொள்ள முடியும்.

(செஸி) அடிச்சட்டக இலக்கம் மூலம் QR முறைமையை பதிவு செய்ய முடியாத வாகன பயனர்கள், வெள்ளிக்கிழமை முதல் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்தி பதிவு செய்ய முடியுமென அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

## கிரிபத்கொட ஆஸ்பத்திரியில்...

ஆரம்பித்துள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அண்மையில் கம்பஹா மாவட்டத்தில் இரண்டு கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது. இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் கொரோனா பரவும் அபாயம் உள்ளதால், பரிந்துரைக்கப்பட்ட சுகாதாரப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுமாறு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது.

## வெறுப்புணர்வு தூண்டும்...

23ஆம் திகதியன்று குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின்படி, முகநூல் சமூக ஊடக வலையமைப்பில் வெளியிடப்பட்ட விளம்பரம் தொடர்பில் பொதுமக்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்தி, அமைதியை சீர்குலைக்கும் நோக்கில் கருத்துக்களை வெளியிட்ட நபர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மாகாண கணினி குற்றப் புலனாய்வு உப பிரிவினரால் விசாரிக்கப்பட்டு நேற்று முன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டார். காலி , கோட்டையைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். தனது முகநூலில் மற்றுமொருவர் வெளியிட்ட விளம்பரத்துக்கு தீங்கிழைத்த மற்றும் வெறுப்புணர்வுடன் பதிவு செய்த குற்றச்சாட்டில் அவரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனால், கடந்த 18ஆம் திகதி அறிவிக்கப்பட்ட அவசரகால சட்ட விதிமுறைகளுக்கமைய, சந்தேக நபர் கைது செய்யப்பட்டு காலி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் ஓகஸ்ட் 08ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

## இலங்கையின் பொருளாதார...

தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார். இந்திய பிரதமர் நரேந்திர அனுப்பியுள்ள வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, “இலங்கையின் 08ஆவது ஜனாதிபதியாக நீங்கள் தெரிவு செய்யப்பட்டதற்கு நான் உங்களை வாழ்த்துகிறேன். இலங்கைக்கு ஒரு முக்கியமான தருணத்தில், நீங்கள் நாட்டின் உயர் பதவியை ஏற்றுள்ளீர்கள்.உங்கள் பதவிக்காலம் இலங்கையின் அனைத்து பிரஜைகளின் அபிலாஷைகளையும் நிறைவேற்றி பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்துமென நம்புகிறேன். இலங்கையின் நெருங்கிய நண்பராகவும் அண்டை நாடாகவும், நிறுவப்பட்ட ஜனநாயக அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் அரசியலமைப்பு கட்டமைப்பின் மூலம் இலங்கை மக்களின் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கான தேடலுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும். நமது மக்களின் பரஸ்பர நலனுக்காகவும், நமது இரு நாடுகளுக்கும் இடையிலான பாரம்பரிய நெருங்கிய மற்றும் நட்புறவு உறவுகளை மேலும் வலுப்படுத்தவும் உங்களுடன் நெருக்கமாக பணியாற்ற நான் எதிர்நோக்குகிறேன். உங்கள் பணி சிறக்க வாழ்த்துகிறேன்”. என்றும் அந்த வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

## சேதம் விளைவித்த 150 பேர்...

எடுக்கப்படுமெனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதார நெருக்கடி நிலைக்கு மத்தியில் கொழும்பு உட்பட பிரதான நகரங்களில் போராட்டங்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. அதே போன்று கடந்த 09 ஆம் திகதி கொழும்பில் திரண்ட பெருந்திரளான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகை, அலரிமாளிகை, ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட கேந்திர இடங்களை ஆக்கிரமித்து அவற்றை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். இந்த இடங்கள் அண்மையில் மீள ஒப்படைக்கப்பட்டதோடு ஜனாதிபதி செயலகம் பாதுகாப்பு நடவடிக்கையின் பின்னர் மீட்கப்பட்டது. அதேவேளை அவற்றுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. குற்றப்புலனாய்வு திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் உள்ளிட்ட குழுக்கள் இந்த விசாரணைகளை நடத்தி வருகின்றன. இதன்படி மேற்படி சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (பா)

## ரயில்வே திணைக்களம் பாரிய...

குறிப்பிட்டதாவது, 2012 இல் வருமானம் 4.8 பில்லியன்களாக இருந்தது. நஷ்டம் 34 பில்லியன்களாக இருந்தது. 2021 இல் வருமானம் 2.7 பில்லியன்களாவும் நஷ்டம் 47 பில்லியன்களாகவும் பதிவாகியுள்ளது. 2022 இல் வருமானம் குறைந்தது. வருமானம் 2.6 பில்லியன்களாகும். நஷ்டம் பில்லியன் 37 களாகும். 4000 கோடி ரூபா வருடாந்த நஷ்டம் ஏற்படுகிறது. இதனால் ரயில்வே திணைக்கள ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கும் சிக்கல் உள்ளது. எரிபொருள் கடனாக பெறுவதில் பிரச்சினை ஏற்பட்டது.10 கோடி ரூபாவுக்கு மேல் நாளாந்த நஷ்டம் உள்ளது. சம்பளத்துக்கு மாத்திரம் 7.8 பில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.மேலதிக நேரக் கொடுப்பனவாக 2021இல் 2.3 பில்லியன்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ரயில்வே திணைக்களத்தை எவ்வாறு நடத்தலாம்.

121 ரூபாவாக இருந்த எரிபொருள் விலை 400 ரூபாவாக உயர்ந்துள்ளதால் ரயில் கட்டணங்களை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டது. பஸ் கட்டணத்தை விட 50 வீதம் குறைவாக ரயில் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.ஆனால் அதிகரித்த கட்டணத்தை அறவிட ரயில் நிலைய அதிபர்கள் எதிர்ப்பு தெரிவித்து வேலை நிறுத்தம் செய்தனர். இதனால் ஏற்படும் நஷ்டத்தை யார் தாங்குவார்கள்? முன்னறிவிப்பின்றி தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாமென ரயில்வே திணைக்கள உத்தியோகஸ்தர்களிடம் கோரியுள்ளோம்.ரயில்வே திணைக்கள செலவுகளை குறைப்பது தொடர்பாக அவர்களுடன் பேச முடியும்.

முன்மாதிரியாக இல்லாமல் வேலை நிறுத்தத்தினால் ஏற்பட்ட நஷ்டத்தை அரசாங்கம் ஏற்க அனுமதி வழங்கியது.இல்லாவிடின் ரயில் சேவையை நிறுத்தும் நிலையே ஏற்படும் என்றார்.

## சட்ட விரோத செயற்பாடுகளுக்கு...

பேச்சாளர் தெரிவித்தார். மக்கள் சட்டத்துக்கு மதிப்பளிக்காது சட்டத்தை கையிலெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தால் நாடு மிக மோசமான நிலையை எதிர் நோக்க நேரும் என்றும் அவர் தெரிவித்தார்.

தினகரன் சார்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவவுடன் மேற்கொண்ட நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்:

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்தை கையகப்படுத்தி தமது விருப்பப்படி அங்கு செயற்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. ஜனாதிபதி செயலகம் என்பது மக்களின் பொது சொத்தாகும். சட்டவிரோதமாக அங்கு பிரவேசிப்பதும் குற்றமாகும்.

புதிய ஜனாதிபதி சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்ற பின்னர் ஜனாதிபதி செயலகத்திற்கு அவர் வருகை தந்து தமது கடமைகளை மேற்கொள்வதற்கு ஆர்ப்பாட்டக்காரர்களால் தடை ஏற்படுத்தப்படுமானால் அங்கிருந்து அவர்களை அகற்றி உத்தியோகபூர்வ செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு வழியமைத்துக் கொடுப்பது பொலிஸாரின் பொறுப்பாகும்.

அது தொடர்பில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு தெளிவுபடுத்தி அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு பல தடவைகள் பொலிஸ் உயர் அதிகாரிகளினால் அறிவுறுத்தப்பட்டுவந்த நிலையிலும் அவர்கள் தொடர்ந்து அதனை நிராகரித்து வந்தனர். அதனையடுத்தே அவர்களை அங்கிருந்து அகற்ற வேண்டிய பொறுப்பை பொலிஸார் நிறைவேற்றினர்.

அங்கிருந்து வெளியேறுவதற்கான கால அவகாசத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரியிருந்தனர் என்று சில தரப்பினரால் முன்வைக்கப்படுகின்ற கருத்துக்களை ஏற்க முடியாது. சட்ட விரோதமான செயற்பாடுகளுக்கு எந்த விதத்திலும் கால அவகாசம் வழங்க முடியாது.

அங்கு பாரிய தாக்குதல்கள் இடம்பெற்றதாக பிரசாரப்படுத்தப்படுகின்ற போதும் அவ்வாறு இடம்பெறவில்லை. சிலர் காயமடைந்துள்ளனர். ஓரிரு கூடாரங்கள் அகற்றப்பட்டன. அந்த சம்பவங்கள் தொடர்பில் ஆறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அது தொடர்பான விசாரணைகள் பொலிஸாரினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறெனினும் சட்ட விரோத செயல்களை மேற்கொள்பவர்களுக்கு எந்த விதத்திலும் கால அவகாசம் வழங்க முடியாது. அவ்வாறு வழங்கினால் அது சட்ட விரோத செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவதாகவே அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேசிய அரசாங்கம் தொடர்பில்...

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவர அவகாசம் கொடுக்க வேண்டும் எனவும், அவசரப்பட்டு எதிர்ப்பு அரசியல் ஆர்ப்பாட்டங்களை செய்யக்கூடாதெனவும், தமிழ் முற்போக்கு கூட்டணி நம்புகிறதென கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மனோ எம்.பி மேலும் கூறியதாவது,

தேசிய அரசு அல்லது சர்வ கட்சி அரசு அமைப்பது தொடர்பில் அதிகாரபூர்வ அழைப்பு வரவில்லை. ஆனால், கட்சி தலைவர்கள் கூட்டத்தின் போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்னிடமும், ஏனைய கட்சி தலைவர்களிடமும் நேரடியாக இது பற்றி கூறினார். ஆனால், கட்சிகளுக்கு சர்வ கட்சி அரசு அமைப்பது தொடர்பில், அரசாங்கத்திடமிருந்து அதிகாரபூர்வ அழைப்பு வரவேண்டும்.

அதன் பிறகு நாம் எமது கட்சிகள் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி அரசியல் குழுக்கள் மத்தியில் இது பற்றி பேசுவோம். அதேபோல் ஐக்கிய மக்கள் கூட்டணி தலைமைக் குழுவிலும் பேசுவோம். இதுதான் ஒரு பொறுப்புள்ள நேர்மையுள்ள ஜனநாயக அரசியல் கட்சி செய்ய வேண்டிய முறைமை. அதை நாம் செய்வோம். எமது முடிவுகளை எமக்கு வாக்களித்து தெரிவு செய்துள்ள, எமது மக்களின் நலன்களை முன்னிட்டு, நாம் ஒற்றுமையாக எடுப்போம்.

அதேவேளை, நாடு இன்று இருக்கும் அவதி நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவர அவகாசம் கொடுக்க வேண்டும் எனவும், அவசரப்பட்டு எதிர்ப்பு அரசியல் ஆர்ப்பாட்டங்களை செய்யக்கூடாது எனவும் தமிழ் முற்போக்கு கூட்டணி திடமாக நம்புகிறது. அதுவே எங்கள் மக்களின் நிலைப்பாடாகவும் இருக்கிறது. பெரும்பான்மை அரசியல் கட்சிகளின் நலன்களை சார்ந்து மாத்திரம் தமிழ் முற்போக்கு கூட்டணி அரசியல் செய்யாது. அரசில் சேருகிறோமோ, இல்லையோ, புதிய அரசியலமைப்பு தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சருடன் நாம், மலையக தமிழ் இலங்கையர்களின் அரசியல் அபிலாஷைகளை முன் வைப்போம். அடுத்து வரும் அரசியலமைப்பு திருத்தத்தில் எமது மக்களின் எதிர்பார்ப்புகளை இடம்பெறச்செய்ய எம்மால் ஆனதை நாம் பொறுப்புடன் செய்வோம் என தெரிவித்தார்.

## எரிபொருள் கொள்வனவுக்கு இந்த...

போது எரிபொருள் வரிசை குறையுமென எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

12 மணி நேரம் மின்சாரத்தை துண்டிக்க நேரிட்டது. எரிபொருள் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டது. நீண்ட வரிசை உருவானது.சமையல் எரிவாயு இன்றி மக்கள் பாதிக்கப்பட்டனர். வர்த்தகர்கள் பாதிக்கப்பட்டனர். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தேவையான சமையல் எரிவாயு தருவிக்கப்பட்டுள்ளது. முதலாம் திகதி முதல் எந்த தட்டுப்பாடும் ஏற்படாதென லிட்ரோ தலைவர் அறிவித்துள்ளார். மின்வெட்டு நேரம் 03 மணி நேரமாக குறைக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவம் செய்து இந்தளவாக குறைக்க முடிந்துள்ளது. விநியோகக் கட்டமைப்பு உலகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. 2015 இல் இலங்கைக்கு எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு 2.7 பில்லியன் டொலர்களே செலவிடப்பட்டது. ஆனால் 2022 இல் 6.7 பில்லியன் டொலர் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. செலவு 04 பில்லியன் டொலர்களால் அதிகரித்துள்ளது. சிறிய ஏற்றுமதி வருமானமுள்ள நாட்டுக்கு இது தாங்க முடியாத செலவாகும். ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்று 1.4 பில்லியன் டொலர்களே பெறப்பட்டது. துறைமுக நகர திட்டத்திற்கு 1.4 பில்லியன்கள் செலவானது.இந்த இரு திட்டங்களுக்கும் 2.8 பில்லியன்கள் செலவாகிறது. ஆனால் எரிபொருள் தருவிப்பதற்கு அதனை விட அதிக மடங்கு செலவாகிறது.

அதனால் எரிபொருள் விநியோகத்துக்கு QR முறைமை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.245 எரிபொருள் நிரப்பு நிலையங்களினூடாக 70,223 வாகனங்களுக்கு எரிபொருள் பெறப்பட்டுள்ளது.40 இலட்சம் பேர் பதிவு செய்துள்ளனர். இந்த QR முறைமை சரியாக செயற்படுத்தப்படுவதின் ஊடாக எரிபொருள் வரிசையை பெருமளவு குறைக்க முடியுமென எரிபொருள் அமைச்சர் அமைச்சரவைக்கு அறிவித்தார். தனியார், பாடசாலை வேன், அம்பியூலன்ஸ், இ.போ.ச பஸ்களுக்கு இ.போ.ச டிப்போக்களினூடாக வழங்கப்படும். பொறுமையுடன் செயற்படுமாறும் நெருக்கடி நிலையிலிருந்து மீளவும் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மக்கள் சிக்கனமாக எரிபொருளை பயன்படுத்துமாறும் கோருகிறோம். மாதாந்தம் பொருள் ஏற்றுமதி வருமானமாக ஒரு பில்லியன் டொலர் கிடைக்கிறது. அதில் 600 மில்லியன் டொலர் எரிபொருளுக்கு செலவானால் ஏனைய துறைகளுக்கு செலவிட பணம் மிஞ்சாது.ஆட்டோக்களுக்கும் ஜெனரேட்டர்களுக்கும் எரிபொருள் வழங்குவதற்காக பொலிஸ் மற்றும் பிரதேச செயலகத்தினூடாக தம்மை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# டளஸ், விமல் தரப்பினர் விரைவில் புதிய முன்னணி

## முன்னாள் அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாராளுமன்ற உறுப்பினர்களான டளஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச உள்ளிட்டவர்களை கொண்ட எதிர்க்கட்சியினர் புதிய முன்னணியொன்றை விரைவில் அமைக்கவுள்ளதாக முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார எம்.பி. தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய அரசாங்கத்துடன் தாம் இணைந்து செயற்படப் போவதில்லையென்றும் அரசாங்கத்தின் சில பதவிகளுக்காக எதிர்க்கட்சியில் சிலருக்கு அழைப்பு கிடைத்துள்ளதாகவும் எவ்வாறெனினும் தமது தரப்பினருக்கு அதற்கான அழைப்பு எதுவும் கிடைக்கவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார். அவ்வாறு கிடைத்தாலும் அரசாங்கத்தின் எந்தவொரு பதவியையும் பொறுப்பேற்கப் போவதில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

ஆளும் கட்சி கூட்டத்துக்கு சமுகமளிக்கவில்லையா? என சிலர் எம்மிடம் கேள்வியெழுப்புகின்றனர். எனினும் தாம் எதிர்க்கட்சியிலேயே உள்ளதாகவும் ஆளும்கட்சி கூட்டத்துக்கு சமுகமளிப்பதில்லையென்றும் தாம் பதிலளித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

# வெள்ளவத்தை கடற்கரையில் சடலம் மீட்பு

வெள்ளவத்தை கடலோர காவற்படை முகாமிற்கு அருகில் உள்ள கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் குறித்து நேற்று மாலை வரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். வெள்ளவத்தை பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து நேற்று காலை அந்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 35 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடைய அந்த சடலத்தில் காயங்கள் எதுவும் இல்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

## காலாவதியான சாரதி... 03ஆம் பக்கத் தொடர்

வழங்கியுள்ளேன். எதிர்வரும் தினங்களின் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.இது தொடர்பில் சிக்கல் உள்ளதை அறிவேன் என்றும் அவர் தெரிவித்தார்.

## கொரோனா பரவல்... 03ஆம் பக்கத் தொடர்

வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்குப் பின்னர் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன் கொரோனா வைரஸ் மரணங்களும் சில தினங்களாக இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் 119 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற 5 கொரோனா வைரஸ் மரணங்களை நேற்றைய தினம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

எவ்வாறெனினும் கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் வகையில் அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதி தலைமையில்... 03ஆம் பக்கத் தொடர்

தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இடைக்கால அரசில் இது வரை 18 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். அன்றாட செயற்பாடுகளை முன்னெடுக்கவே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சர்வக கட்சி அரசு அமைப்பதற்காக அமைச்சர்களின் தொகையை அதிகரிப்பது குறித்து அமைச்சரவையில் ஆராயப்படவில்லை. அரசியலமைப்பிற்கு உட்பட்டே அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுப்பதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதையடுத்து பாராளுமன்ற எம்.பிக்களின் வாக்குகளினால் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஜனாதிபதியாக தெரிவானார். அதனை தொடர்ந்து 18 பேர் கொண்ட இடைக்கால அரசாங்கம் நியமிக்கப்பட்டது. ஆளும் தரப்பு மற்றும் எதிர்த்தரப்பில் உள்ள கட்சிகள் மற்றும் குழுக்களை இணைத்து சர்வக கட்சி அரசாங்கம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதோடு 02 வாரங்களுக்குள் அதற்கான நடவடிக்கை நிறைவு செய்யப்பட இருப்பதாக அறிய வருகிறது. (பா)

## பிதிர்க்கடன் செலுத்தல்... 03ஆம் பக்கத் தொடர்

பரவுதலை தடுக்கும் நோக்கோடு சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி வெள்ளவத்தை புகையிரத நிலையத்துக்கு அருகிலுள்ள கடற்பரப்பில் காலை 6.00 மணிமுதல் பிதிர்க்கடன் செலுத்துவதற்கு இந்து சமயகலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இந்து பண்பாட்டு நிதியத்தினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## எரிபொருள் நெருக்கடிக்கு...

பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. இன்று வரை எரிபொருள் வரிசைகள் கிலோமீற்றர் நீளமாக உள்ளது, மேலும் வரிசையில் நிற்கும் போது இரு மரணங்களும் பதிவாகியுள்ளது என அவர் தெரிவித்தார்.

ஓகஸ்ட் 15ஆம் திகதிக்குப் பின்னர் எரிபொருளுக்கான முன்பதிவுகளை வழங்காததால், QR குறியீடு முறையின்படி, பெற்றோல் நாளாந்த பயன்பாட்டை 2,000 மெற்றி தொன்னாகவும், டீசல் 3,000 மெற்றிக் தொன்னாகவும் குறைக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். செப்டெம்பர் மாதம் வரை எந்தவொரு வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவில்லையென குற்றம் சுமத்திய அவர், QR குறியீடு என்பது முன்பதிவு செய்யும் செயல்முறையை தாமதப்படுத்தும் ஒரு முறையாகும் என்றார்.

## தங்கம், வலம்புரி...

சுமார் 470 கிராம் தங்கக்கட்டியும் ஒரு வலம்புரி சங்கும் கைப்பற்றப்பட்டது. அத்துடன் மூவர் (03) கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். ஒரு கண்ணாடி இழை படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது. கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 24 மற்றும் 39 வயதுடைய, புத்தளம் மற்றும் பேசாலை பகுதிகளைச் சேர்ந்தவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனர்

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் சுங்க அலுவலகத்தில் இவர்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## ராஜிதவின் வழக்கை...

கறுப்பு பட்டியலிலுள்ள நிறவனம் ஒன்றுக்கு கொழும்பு முகத்துவாரம் மீன்பிடித்துறைமுகத்தை குத்தகைக்கு வழங்கியதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குற்றப்புலனாய்வு பொலிஸார் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

எனினும், இந்த வழக்கு தற்போதைக்கு இலஞ்ச, ஊழல் தடுப்பு சட்டப்பிரிவின் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டதால், இந்த வழக்கை மீளப்பெற குற்றப்புலனாய்வு பொலிஸார் நீதிமன்றத்தில் அனுமதி கோரியிருந்தனர். இதனை தொடர்ந்து, கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதவான் கேமிந்த பெரேராவின் அனுமதியுடன் ராஜித சேனாரத்னவுக்கு எதிரான மோசடி வழக்கு மீளப்பெற்று கொள்ளப்பட்டுள்ளது.

## தமிழர் ஒருவருக்கு...

வெளியிட்டுள்ளது. மூன்று குழந்தைகளுக்கு தந்தையான சிவபாதம் கூறுகையில், இது தான் எனது முதல் பெரிய வெற்றி. நான் என் லொட்டரி டிக்கெட்டை OLG செயலியில் சரிபார்த்த போது பரிசு விழுந்தது தெரிந்தது. ஆனாலும் நான் அமைதியாகவே இருந்தேன், ஏனென்றால் அது தான் என் இயல்பு. பரிசு விழுந்தது குறித்து என் மனைவிக்கு முதலில் சொன்னேன், அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். பரிசு பணத்தை வைத்து புதிய கார் வாங்க திட்டமிட்டுள்ளேனென கூறியுள்ளார்.

## தமிழக அரசின் மனிதாபிமான...

இலங்கைக்கு அனுப்பப்பட்ட மனிதாபிமான உதவிகள், மூன்றாவது கட்டமாக இலங்கையை வந்தடைந்தன. இதுவரையில், 40,000 மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன் பால் மா மற்றும் 100 மெற்றிக் தொன் மருந்துகளென மொத்தமாக சுமார் 22 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் தமது டுவிட்டரில் தெரிவித்துள்ளது.

# போதிய குடிநீர் வசதியின்றி தவிக்கும் கிளிநொச்சி கிராம மக்கள்

(பரந்தன் குறுப் நிருபர்)



கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி மற்றும் கரைச்சி ஆகிய பிரதேசங்களில் நிலவும் கடும் வரட்சி காரணமாக பெருமளவான குடும்பங்கள் குடிநீரை பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பல கிராமங்கள் குடிநீர் நெருக்கடியை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர். அதுவும் தற்போதைய வரட்சி நிலைமை மற்றும் குடிநீர் விநியோகத்துக்கான எரிபொருள் இன்மை போன்ற காரணங்களினால் குடிநீரை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி

## நீர் தேடி அலையும் கால்நடைகள்

வருகின்றனர். கால்நடைகள் கூட குடிநீர் தேடி அலைகின்ற நிலைமையும் காணப்படுகிறது.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஞானிமடம் சித்தங்குறிச்சி, செம்மண் குளம் போன்ற பிரதேசங்களில் சுமார் 136ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் செட்டிகுறிச்சி, கறுக்காய் தீவு போன்ற கிராமங்களில் 245ற்கும் மேற்பட்ட குடும்பங்களும் குடிநீரை பெற்றுக் கொள்வதில் பெரும் நெருக்கடி நிலைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.



இப்பிரதேசங்களை ஊடறுத்து தேசிய நீர் வளங்கள் வடிகால் அமைப்புச் சபையினுடைய குடிநீர் விநியோக இணைப்புகள் வழங்கப்பட்டிருந்தாலும் அவ்விடங்களுக்கு இதுவரை குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் இப்பிரதேசத்தில் வாழும் குடும்பங்கள் தமக்கான குடிநீரை பெற்றுக் கொள்வதில் தொடர்ந்து நெருக்கடி நிலைகளை எதிர் கொண்டு வருகின்றனர்..

தமது பிரதேசங்களில் குடிநீர் விநியோகத்திற்கான பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதிகள் வழங்கப்பட்டு வருகின்றதே தவிர கடந்த 10 ஆண்டுகளுக்குள் இதுவரை எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

## வடக்கின் உதயம்



மாற்றுப்பாலின சமூகத்தினருக்கு எதிரான ஒடுக்குமுறைகளை கண்டித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பேரணியொன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்த பேரணி பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலூடாக சென்று விஞ்ஞான பீட நுழைவாயிலூடாக பல்கலைக்கழகத்திற்குள் சென்று நிறைவடைந்தது. பேரணியில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். படம் யாழ்.விசேட நிருபர்

## இந்து கற்கைகள் பீட மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் முதலாவது அணி மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வின் அறிமுக வைபவம் இன்று புதன்கிழமை காலை 8 மணி முதல் இடம் பெறவுள்ளது. க. பொ. த உயர்தர 2019 ஆம் ஆண்டு கலைப் பிரிவில் தோற்றி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கலைப்பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் சுமார் 50 மாணவர்கள் இந்து கற்கைகள் பீடத்தில் 2020 / 2021 ஆம் கல்வியாண்டுக்காகப் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

இவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வே இன்று புதன்கிழமை காலை அறிமுக வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது.



தென்மராட்சி கல்வயல் புலுட்டையன் பிள்ளையார் என அழைக்கப்படும் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஏழு தளங்கள் கொண்டதாக 81 அடி உயர ராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டதை தொடர்ந்து உருவாக்கப்பட்ட சிறப்பு மலரின் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் ச. அகிலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ராஜ கோபுரத் திருப்பணியை உபயமாக மேற்கொண்ட பிரித்தானிய வைத்தியர் டாக்டர் ச. ஜெயநாதன் மலரை வெளியிட்டு வைத்தார். கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் மலருக்கான நயப்புரையை ஆற்றினார். ஆலய தர்மகர்த்தா சி. விவேகானந்தன், மலர் ஆசிரியர் திருக்கணிதம் சிவஞானம் கோபுர நிர்மாணக் கலைஞர் மணிகண்டன் குழுவினர் ஆகியோருக்கான கௌரவிப்புகளும் இடம்பெற்றன.

## குளவிக் கொட்டுக்கு இலக்காகி பெண் மரணம்

நாகர்கோவில் விஷேட நிருபர்)

விறகு வெட்டச் சென்றபோது கருங் குளவிக் கொட்டுக்கு இலக்கான குடும்பப் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் வல்வெட்டி, வல்வெட்டித்துறையை சேர்ந்த ஈஸ்வரி பாஸ்கரன் (வயது 60) என்பவராவார். கடந்த ஞாயிற்றுக் கிழமை(24) விறகு எடுப்பதற்காக அயலிலுள்ள பகுதிக்கு சென்றபோது வீழ்ந்து இருந்த பனை ஓலையில் இருந்த கருங்குழவிகள் மூன்று அவரின் தலையில் கொட்டியுள்ளது. உடனடியாக ஊரணி வைத்தியசாலையில் அனுமதித்து பின்னர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை(25) பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்ட போதும் அங்கு மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

## நல்லூர் மகோற்சவ காலத்தில் புதிய விதிமுறைகள்



யாழ்.விசேட நிருபர்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர் வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளநிலையில், அதனுடைய ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக யாழ் மாநகர சபையினால் விளக்கமளிக்கப்பட்டது. மஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை யாழ் மாநகர சபையில் இடம்பெற்றது.

கலந்துரையாடலுக்கு பின்னர் நல்லூர் ஆலயப் பெருந்திருவிழா ஏற்பாடுகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே யாழ் மாநகர முதல்வர் மணிவண்ணன் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

ஈஸ்டர் குண்டு வெடிப்பு மற்றும் கொரோனா தொற்று காரணமாக கடந்த மூன்று வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம் பெற்ற நல்லூர் மஹோற்சவம் வழமைபோன்று அதாவது 2018 ஆம் ஆண்டுக்கு முன்னர் எவ்வாறு உற்சவம் நடந்ததோ அதேபோல இம்முறை இடம்பெறுமென யாழ் மாநகர முதல்வர் மணிவண்ணன் தெரிவித்தார்.

ஆகஸ்ட் 1ஆம் திகதி காலையில் இருந்து நல்லூர் ஆலய சுற்றுவீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு ஆகஸ்ட் 29 ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே திறந்து விடப்படும்.




## இளைஞர் யுவதிகளின் வாழ்வாதார பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்



நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நுவரெலியா மாவட்டத்தில் பெருந்தோட்ட சமூகத்தினர் மற்றும் அரச ஊழியர்கள் உள்ளிட்ட இளைஞர் யுவதிகள் வாழ்வாதாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையிலிருந்து இவர்களை மீட்டெடுக்க மாவட்ட செயலாளர் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என நுவரெலியா மாவட்ட செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு கலந்துரையாடப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடல் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் நந்தன கலப்பட மற்றும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் உறுப்பினர்களுக்கிடையில் நேற்றுமுன்தினம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுள்ளது. இதன்போது இன்றைய பொருளாதார நெருக்கடிகளிலிருந்து பெருந்தோட்ட இளைஞர் யுவதிகளை பாதுகாக்கவும் அவர்களை பொருளாதார ரீதியில் மேம்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. பெருந்தோட்ட பகுதிகளில் காணப்படும் பயிரிடப்படாத தரிசு காணிகளை விவசாயம் மற்றும் சுய தொழில் முயற்சிகளுக்காக முறையாக பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுத்தல் அத்துடன் சுயத்தொழில் முயற்சியில் ஈடுபட விரும்புவோருக்கு உரிய துறைகளின் ஊடாக பயிற்சி, வழிகாட்டல் மற்றும் கடன் வசதிகளை பெற்று கொடுக்க நடவடிக்கை எடுத்தல் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

## யூரியா பசளைப் பொதிகளில் மோசடி

தம்புள்ள தினகரன் நிருபர்

தம்புள்ள பிரதேசத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட யூரியா பசளைப் பொதிகள் உரிய நிறைகளைக் கொண்டிருக்கவில்லை என்று விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர். யூரியா பசளைப் பொதிகளின் நிறைகளைப் பரிசீலித்து அதன் பிரகாரம் பசளைப் பொதிகளுக்கான பணத்தை அறவிடுவதற்கு தீர்மானித்ததாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

தம்புள்ள பிரதேச விவசாயிகளுக்கு அப்பகுதி கமநல சேவை மத்திய நிலையங்களினூடாக பகிர்ந்தளிக்கப்பட்ட யூரியா பசளைப் பொதிகள் குறித்த நிறையைக் கொண்டிருக்கவில்லை.

இக்குளறுபடிகள் தொடர்பில் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர விவசாய திணைக்களத்தின் செயலாளர் ரோஹண புஷ்பகுமாரவிற்கு சுட்டிக்காட்டியிருந்தார். இதனையடுத்து பசளைப் பொதிகளின் நிறைக்கேற்ற கட்டணத்தை அறவிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# கடும் மண்சரிவு அபாயம்; போக்குவரத்து தடை

(ஹாலி எல விசேட நிருபர் )

கடும் மழையினால் மரங்கள் முறிந்து மண்மேடு விழுந்து தடைப்பட்டிருந்த பதுளை – பசறை பிரதான வீதியின் வாகன போக்குவரத்துக்கு மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் ஈ.எம்.எல்.உதய குமார தெரிவித்தார். பதுளை பசறை வீதியானது மழைக்காலத்தில் அடிக்கடி மண்சரிவினால் தடைப்படும் வீதியாக இது இனங்காணப்படுகின்றது.



பதுளை மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் மழை காரணமாக வாகனங்களை கவனமாக செலுத்துமாறும், செங்குத்தான வீதிகளில் பயணிக்கும் போது மிகுந்த அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பதுளை பஸ்ஸர பிரதான வீதி வெவஸ்ஸ 5ஆம் கட்டைக்கு அருகில் மரங்கள் முறிந்து மண்மேடு வீழ்ந்தமையினால் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டிருந்தன.

இதனையடுத்து பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் அதிகாரிகள் மற்றும் அனர்த்த நிவாரண பணியாளர்கள், பணியில் ஈடுபட்டு அந்த வீதியை சீரமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதன் மூலம் இவ்வீதியிலுள்ள தடைகளை உடனடியாக அகற்றும் பணியில் ஈடுபட்டதாக பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் ஈ.எம்.எல். உதய குமார தெரிவித்தார்.

## பற்றை காட்டு புற்களால் வீதி போக்குவரத்தில் பாதிப்பு



அக்கரப்பத்தனை பிரதேசசபைக்குரியலிந்துலை மெராயா நகரிலிருந்து தலவாக்கலை பிரதேசத்தை நோக்கி செல்லும் பிரதான வீதியினை மூடும் அளவிற்கு பற்றைக்காட்டு புற்கள் வளர்ந்துள்ளன.

இதனால் இவ்வீதி ஊடாக போக்குவரத்தை மேற்கொள்ளும் வாகனங்கள் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்பட்டுள்ள இவ்வீதியின் கவனத்திற் கொண்டு அக்கரப்பத்தனை பிரதேச சபை அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க முன்வர வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு பிரதான வீதியை நோக்கி வளர்ந்து வரும் பற்றை காட்டு புற்களை வெட்டி அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் இவ்வீதியில் பயணிக்கும் வாகனங்கள் வருவது கூட தெரியாது ,ஒதுக்குவதாகவும் இடமில்லாது ஆபத்தை எதிர்கொள்ள நேரிடுவதாக பொது மக்கள் மேலும் சுட்டிக் காட்டினர்.

ஆ.ரமேஸ்

## குறுந் திரைப்பட விழாவில் இலங்கைக்கு கௌரவம்

தலவாக்கலை குறுப் நிருபர்



இந்தியாவில் நடாத்தப்பட்ட சர்வதேச ரீதியிலான" INDIE SHORTS FILM 2022 குறும்படப் போட்டியில் இலங்கை சார்பில் கலந்து கொண்ட நுவரெலியாவைச் சேர்ந்த பத்தும் மஹாகம சிறந்த நடிகருக்கான விருதை வென்றார். சமீபத்தில் இந்தியாவில் நடைபெற்ற 2022 ஆம் வருடத்திற்கான சர்வதேச குறும்படப் போட்டியின் இறுதிச்சுற்றில் இலங்கையின் பத்தும் மஹாகம சிறந்த நடிகருக்கான விருதை வென்றுள்ளார். சச்சின் செந்தில்குமாரன் மற்றும் பத்தும் மஹாகம இணைந்து இயக்கிய 'முகம்' என்ற குறும்படத்தில் நடித்ததால் அவர் இவ்விருதை வென்றிருப்பது இலங்கை குறும்படத் துறைக்கும் வளர்ந்து வரும் கலைஞருக்கும் கிடைத்த கௌரவமாகும். பத்தும் மஹாகம எழுதிய 10 நிமிட குறும்படத்தில் உரையாடல் இல்லை என்பதும் சிறப்பு அம்சமாகும். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடத்தின் இறுதி வருட மாணவரான பத்தும், நுவரெலியாவைச் சேர்ந்த வர்த்தகரும் ஊடகவியலாளருமான சந்திரசிறி மஹாகமவின் மகனாவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 11ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 27

## குறள் தரும் சிந்தனை

பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்

ஒரு காரியத்தில் ஈடுபடுவதற்கு முன்பு, அதற்குத் தேவையான பொருள், ஏற்ற கருவி, காலம், மேற்கொள்ளப் போகும் செயல்முறை, உகந்த இடம் ஆகிய ஐந்தையும் குறையில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

# கொவிட் தவிர்ப்பு நடைமுறைகளை மீண்டும் கடைப்பிடிப்பதன் அவசியம்

சீனாவில் தோற்றம் பெற்று குறுகிய காலப்பகுதிக்குள் முழு உலகிற்கும் பெரும் சவாலாக விளங்கிய கொவிட் 19 தொற்றின் அச்சுறுத்தல், தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்ததும் வீழ்ச்சியடையத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஏற்பட்டது.

இதன் விளைவாக கொவிட் 19 தொற்று தவிர்ப்புக்கான வழிமுறைகள் குறித்து மக்கள் கவனயீனமாகவும் அசிரத்தையோடும் நடந்து கொள்ளத் தொடங்கினர். அதாவது சமூக இடைவெளியைப் பேணுதல், முகக்கவசம் அணிதல் போன்ற விடயங்கள் வரையும் இந்த அசிரத்தை வளர்ச்சி பெற்றது.

ஆனால் இத்தடுப்பூசி கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைப் பலவீனப்படுத்தக் கூடியதே அன்றி இத்தொற்றுக்கு உள்ளாவதைத் தவிர்க்கக் கூடியதல்ல. அது தான் மருத்துவ நிபுணர்களின் கருத்து.

அந்த அடிப்படையில்தான் நாட்டின் சனத்தொகையில் பெரும் பகுதியினருக்கு இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொடுத்துள்ள இஸ்ரேல் போன்ற சில நாடுகளில் இத்தொற்று அவ்வப்போது தீவிர நிலையை அடையக் காரணமாக அமைந்துள்ளது. அத்தோடு இத்தொற்று தோற்றம் பெற்ற சீனாவிலும் இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியை அதிகளவிலானோர் பெற்றுக் கொண்டுள்ள போதிலும், அந்நாட்டிலும் இத்தொற்று அவ்வப்போது தலைதூக்கக் கூடியதாக உள்ளது. அங்கு சில பிரதேசங்கள் அவ்வப்போது முடக்கம் செய்யப்படும் நிலைமையும் ஏற்படுகின்றது.

கொவிட் 19 தொற்று தடுப்பூசிக்குப் பின்னர் இவ்வாறான அனுபவங்களைப் பெற்றுள்ள நாடுகள் இத்தொற்று தவிர்ப்புக்காக முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை பேணுதல் போன்ற விதிமுறைகளை மக்கள் தொடர்ந்தும் கடைபிடிக்கக் கூடிய விதிமுறைகளை நடைமுறைப்படுத்துகின்றன.

அந்த வகையில் உலகின் ஏனைய நாடுகளைப் போன்று இலங்கையிலும் கொவிட் 19 தொற்று தடுப்பூசியை அதிகளவிலானோர் பெற்றுக் கொண்டுள்ளதன் பயனாக இத்தொற்றின் தாக்கம் வீழச்சியடைந்து காணப்படுகிறது. இதன் விளைவாக முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல் போன்ற செயற்பாடுகளில் இருந்து மக்கள் தூரமாகத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறான நிலையில், இந்நாட்டில் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கையில் கடந்த சில தினங்களாக அதிகரிப்பு ஏற்பட்டு வருகின்றது. அதுவும் பெருவீழ்ச்சி நிலையை அடைந்திருந்த பின்னணியில்தான் மீண்டும் அதிகரிக்கக் கூடிய நிலையை இத்தொற்று அடைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் இந்நிலை தொடர இடமளிக்கலாகாது. இத்தொற்றின் பரவுதலை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்திக் கொள்வதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும். இது ஒரு தொற்று நோயாக இருப்பதால் இது அவரவர் பொறுப்பாகும். தவறும் பட்சத்தில் கடந்த காலங்களைப் போன்று இந்நாட்டிலும் இத்தொற்று மீண்டும் தீவிரமடையவே வழிவகுக்கும்.

இந்த நிலையில் கொவிட் 19 தொற்று கட்டுப்பாடு குறித்து சுகாதாரத் தரப்பினர் கூடுதல் கவனம் செலுத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். அந்த வகையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன, நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு பொது இடங்களிலும் பொதுப்போக்குவரத்துகளிலும் முகக்கவசம் அணிவதைத் கட்டாயப்படுத்தி இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் சுகாதார அமைச்சின் தொற்று நோய்கள் கட்டுப்பாட்டு பிரிவின் மருத்துவ நிபுணர் அன்வர் ஹம்தானி, கொவிட் 19 தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் கடந்த சில தினங்களாக அதிகரிப்பு ஏற்பட்டிருகின்றது. ஒமிக்ரோன் வைரஸின் திரிபுக்கு உள்ளானவர்களே இங்கு அடையாளம் காணப்படும் நிலை காணப்படுகிறது. அதன் காரணத்தினால் கொவிட்19 தொற்று பரவுதலுக்குத் துணை புரியக் கூடிய அனைத்து செயற்பாடுகளையும் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ள டொக்டர் அன்வர் ஹம்தானி, முகக்கவசம் அணிந்து கொள்வதிலும் சமூக இடைவெளியைப் பேணிக் கொள்வதிலும் அதிக கவனம் செலுத்துமாறு வலியுறுத்தி உள்ளார்.

இது காலத்திற்கு அவசியமான வேண்டுகோளும் வலியுறுத்தலும் ஆகும். இத்தொற்று பரவுதலைத் தவிர்ப்பதற்கான செயற்பாடுகளை கடைப்பிடிப்பது இன்றியமையாததாகும். இதைவிடுத்து இத்தொற்று பரவுதல் தொடர்பில் அசிரத்தையோடும் கவனயீனமாகவும் நடந்து கொள்வது, இத்தொற்று மீண்டும் தீவிரமடையவே வழிவகுக்கும். அவ்வாறான ஒரு நிலை ஏற்பட எவரும் துணை போகலாகாது. அதற்கு கடந்த காலங்களில் பெற்றுக் கொண்டுள்ள பாடங்கள் நல்ல உதாரணங்களாகும். இவற்றைப் பொருட்படுத்தாது இத்தொற்று பரவத் துணைபுரிவது, நாட்டுக்கும் மக்களுக்கும் பாதிப்புகளும் தாக்கங்களும் ஏற்படப் பங்களிப்பதாகவே அமையும்.

editor.tkn@lakehouse.lk

# குமண காட்டுப்பாதை ஊடாக இம்முறை 45 ஆயிரம் பக்தர்கள் யாத்திரை செல்வர்




கதிர்காமக் கந்தன் வருடாந்த உற்சவத்துக்குச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப் பாதை நேற்றுக் காலை திறக்கப்பட்டது. குமண காட்டின் வழியாகச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை மதச் சடங்குகளுடன் கடந்த 22 ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாகத் திறக்கப்பட்டது.

கதிர்காமம் காட்டுப்பாதை வழியாக சுமார் 6000அடியார்கள் முதல் நாளன்று பிரவேசித்தனர். இந்து சமய கலாசார முறைப்படி கழுகுமலை பத்து பாடி பாதை திறந்து வைக்கப்பட்டது. கொரோனா காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக காட்டுப் பாதை திறக்கப்படவில்லை என்பது தெரிந்ததே.

அதிகாலை 5.30 மணிக்கு உகந்தைமலை முருகன் ஆலயத்தில் பிரதமகுரு சிவசிறி க.கு. சீதாராம் குருக்கள் விசேட பூஜை நடத்தி ஆசியுரை வழங்கினார். காலை 7 மணியளவில் குமண சரணாலய நுழைவாயிலில் காட்டுப் பாதை சம்பிரதாய பூர்வமாக திறக்கப்பட்டது. அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், லகுகலை பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா, மொனராகலை மாவட்ட மேலதிக அரசாங்கஅதிபர், ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க, கிழக்கு கலாசார பணிப்பாளர் ச.நவநீதன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரனின் ஆலோசனைக்கமைவாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜியின் ஏற்பாட்டில் காட்டுப் பாதை திறந்துவைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த சி.ஜெயராசா தலைமையிலான பாதயாத்திரை அடியார்களும் காட்டுப்பாதை வழியாகச் சென்றனர். உள்ளிட்ட 6 ஆயிரம் அடியார்கள் கலந்து கொண்டார்கள்.

கதிர்காம காட்டுப் பாதை மொத்தம் 56 மைல் தூரம் ஆகும். சுமார் 6 நாட்கள் இந்த காட்டுப் பயணத்தை அடியார்கள் மேற்கொள்வது வழமை. காட்டுப்பாதை ஓகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி மூடப்படுகிறது. கதிர்காமம் கொடியேற்றம் 29ஆம் திகதி நடைபெற உள்ளது. ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி தீர்த்தம் இடம்பெறும்.

இதேவேளை கதிர்காமம் பாதயாத்திரை அடியார்களின் முதலாவது வனவழி வழிபாட்டுத் தலமான பொத்துவில் உகந்தை முருகன் ஆலயத்தில் பக்தர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. கதிர்காமம் பாதயாத்திரை அடியார்கள் ஆலயச் சூழலில் தங்கி ஓய்வு எடுப்பதற்கும் அவர்களது பாதுகாப்பு, சுகாதாரம், குடிநீர், மின்சாரம், மருத்துவம் மற்றும் போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாக உகந்தை முருகன் ஆலய பரிபாலனசபைச் செயலாளர் பஞ்சாட்சரம் தெரிவித்தார்.

இந்த ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் ஆலய சூழலின் புனிதத்தைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவது அவசியம். தனது நேரடி கண்காணிப்பில் இப்பணி இடம்பெற்று வருவதாகவும் ஆலயத்தினை அண்மித்துள்ள அன்னதான மடங்களில் உணவு ஏற்பாடும் பூர்த்தியாகி உள்ளதெனவும் ஆலய வண்ணக்கர் ஜெ.டி.எம். சுதுநிலமே தெரிவித்தார்.

குமண காட்டுப்பகுதியில் பாதயாத்திரிகர்களுக்கான குடிநீர் விநியோகத்தை நீர்வழங்கல் அதிகார சபை, லகுகலை, பாணமை, திருக்கோவில் பிரதேச சபைகள் மற்றும் மாவட்ட செயலகமும் இணைந்து மேற்கொள்வதுடன் சுகாதார வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இம்முறை 20 ஆயிரம் முதல் 45 ஆயிரம் வரையிலான பக்த அடியார்கள் குமண (கூமுனை) வனவழிப்பாதை ஊடாக கதிர்காமம் செல்வார்கள் என எதிர்பார்க்கப் படுகின்றது.

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*
**நடராஜன் ஹரன்...**
*(பனங்காடு)*

# மனிதக் கடத்தல் முழுமையாக கட்டுப்படுத்தப்பட வேண்டும்

## ஊடகவியலாளர்களின் பங்களிப்பை பெறுவதற்காக அனுராதபுரத்தில் செயலமர்வு

மனிதக் கடத்தலுக்கு எதிராக ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தும் செயலமர்வு அண்மையில் அநுராதபுரம் சிபேங்க் ஹோட்டலில் நடைபெற்றது. SAFE சேர்ப் அறக்கட்டளை நிறுவனம் மற்றும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் அநுராதபுரம் மாவட்ட ஊடகப் பிரிவு இணைந்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தன.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அநுராதபுரம் அலுவலகத்தின் கல்வி மற்றும் தரவு அதிகாரி தனுஷ்க சாமில் மனிதக் கடத்தலை தடுப்பது குறித்து விரிவுரையை நிகழ்த்தியதுடன் மனித கடத்தல் அச்சுறுத்தல்கள், மோசடி, ஏமாற்றுதல், தூண்டுதல் போன்றவற்றினால் மக்கள் பாதிக்கப்படுவதை உதாரணங்களுடன் விளக்கினார்.

நாட்டிலிருந்து மனிதக் கடத்தலை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு பங்களிக்கும் வகையில் ஊடகவியலாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்குவதே இந்தச் செயலமர்வின் பிரதான நோக்கமாக இருந்தது. இந்த நிகழ்ச்சியில் ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



மனிதகுலம் தற்போது பல்வேறு காலகட்டங்களைக் கடந்து நாகரிக யுகத்தினுள் நுழைந்துள்ளது. பழைமையான பண்புகளை கடைப்பிடிக்க பலர் தவறி விடுகிறார்கள். மனிதக் கடத்தல் மற்றும் கடத்தல் ஆகியவை கட்டுப்படுத்தப் பட வேண்டும்.

மனிதக் கடத்தல் பல வழிகளில் நடைபெறுகிறது. தொழிலாளர் சுரண்டல், பாலியல் சுரண்டல், தொழில்வாய்ப்பு, அடிமைத்தனம், உடல் உறுப்புகளை அகற்றுதல் போன்றவற்றுடன் மனிதக் கடத்தல் சம்பந்தப்பட்டுள்ளது.

ஆட்கடத்தலில் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்களும் சிறு குழந்தைகளுமே ஆவர். வெளிநாட்டு வேலைவாய்ப்பின் போது கடவுச்சீட்டை வலுக்கட்டாயமாக தடுத்து வைப்பது, கூடுதல் நேர வேலைக்காக ஊதியம் செலுத்தாதது மற்றும் வாக்குறுதியளிக்கப்பட்ட ஊதியத்தை வழங்காதது ஆகியவை மனித கடத்தலின் கீழான குற்றங்களாகும்.

மனிதக் கடத்தல் இலங்கைக்கு மட்டும் உரியதல்ல. வளர்ந்த நாடுகளில் கூட பெரிய அளவிலான மனிதக் கடத்தல் நடைபெறுகின்றது. அரசியல் ஆதரவுடனும் பாதுகாப்புடனும் இன்று பல நாடுகளில் மனிதக் கடத்தல் நடைபெறுகிறது. நமது நாட்டின் புவியியல் இருப்பிடம் காரணமாக, இது மனித கடத்தலின் முக்கிய இடமாக இலங்கை மாறியுள்ளது.

மனிதக் கடத்தல் என்பது பாதிக்கப்பட்டவரின் அனுமதியுடனோ அல்லது அனுமதி இல்லாமலோ நடக்கலாம். சில சமயங்களில் பாதிக்கப்பட்டவரை ஏமாற்றி அல்லது அச்சுறுத்தி ஒப்புதல் பெறப்படலாம். 1846 ஆம் ஆண்டு தென்னிந்தியாவிலிருந்து தோட்ட வேலைக்காக இந்நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் சுரண்டப்படுகின்றனர். கொலோவோவின் தொலைதூரப் பகுதிகளில், இளம் பெண்கள் மற்றும் குழந்தைகள் தரகர்களால் ஏமாற்றப்பட்டு வேலைக்காரர்களாக அல்லது விபசார விடுதிகளுக்கு விற்கப்படுகின்றனர். இவ்வாறெல்லாம் மனித கடத்தல் தனிநபர்கள் அல்லது குழுக்களால் மேற்கொள்ளப்படுகிறது.




சட்டவிரோத வணிக வலையமைப்பாக மனித கடத்தல் செயற்படுவதால் சர்வதேச ரீதியாகவும், பிராந்திய ரீதியாகவும், உள்நாட்டிலும் அதற்கு எதிராக சட்டம் இயற்றப்பட்டுள்ளது. சர்வதேச அளவில், இதற்கான முன்னணி சட்டம் உள்ளது. இது நாடு கடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான ஐ.நாவினால் 2000 ஆம் ஆண்டில் இத்தாலியின் பெலமா என்ற நகரில் வைத்து கையெழுத்திடப்பட்டது. 2015 ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்திட்டுள்ளது.

உள்நாட்டில், மனிதக் கடத்தல் மற்றும் கடத்தலைத் தடுக்க சட்டம் இயற்றப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தண்டனைச் சட்டத் திருத்தச் சட்டம் இதையும் அதற்கு எதிராக வழங்கப்படும் தண்டனைகளையும் வரையறுத்துள்ளது. அதன்படி, ஒருவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், அவருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத சிறைத் தண்டனை அல்லது இருபது ஆண்டுகளுக்கு மேற்படாத் சிறைத் தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படும். ஒரு குழந்தையின் விஷயத்தில் இருபது ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படும்.

மனித கடத்தலை சமூகத்தில் இருந்து ஒழிக்க, அதற்கு எதிராக அனைவரும் ஒன்றுசேர்ந்து செயற்பட வேண்டும். நாகரிகமான மனித சமூகம் என்பது மற்றவர்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளை மதிக்கும் அழகான சமூகமாகும். இவ்வாறு இச்செயலமர்வில் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.



**ஏ.ஆர்.எம்.ரபியூதீன்...**
*(திறப்பனை தினகரன் நிருபர்)*

# வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் குடிநீர் பிரச்சினை இன்னும் தீரவில்லை!

## பூநகரி, கரைச்சி பிரதேச மக்களின் அவலம்

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி மற்றும் கரைச்சி ஆகிய பிரதேசங்களில் நிலவும் கடும் வரட்சி காரணமாக பெருமளவான குடும்பங்கள் குடிநீர் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்கள் குடிநீர் நெருக்கடியை எதிர்கொள்ளுகின்ற பிரதேசங்களாக காணப்படுகின்றன. கடுமையான வரட்சியே இதற்குக் காரணமாகும். தற்போதைய வரட்சி நிலைமை மற்றும் குடிநீர் விநியோகத்துக்கான எரிபொருள் இன்மை காரணமாக மக்கள் குடிநீர் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதுடன், கால்நடைகள் குடிநீர் தேடி அலைகின்ற பரிதாபமும் காணப்படுகிறது.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஞானிமடம், சித்தங்குறிச்சி, செம்மண்குளம் போன்ற பிரதேசங்களில் 136 குடும்பங்களும், செட்டிகுறிச்சி, கறுக்காய் தீவு போன்ற கிராமங்களில் 245 க்கும் மேற்பட்ட குடும்பங்களும் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் நெருக்கடி நிலைகளை எதிர் கொண்டு வருகின்றன.

இந்தப் பிரதேசங்களை ஊடறுத்து தேசிய நீர் வளங்கல் வடிகாலமைப்புச் சபையினால் குடிநீர் விநியோக இணைப்புகள் வழங்கப்பட்டிருந்தாலும், குறித்த இடங்களுக்கு இதுவரை குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை.



இதனால் இப்பிரதேசத்தில் வாழும் மேற்படி குடும்பங்கள் தமக்கான குடிநீர் பெற்றுக் கொள்வதில தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றன.

இதே போன்று பூநகரி பிரதேசத்தில் கால்நடைகளும் நீர் தேடி அலையும் ஒரு அவல நிலையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.



தமது பிரதேசங்களுக்கு குடிநீர் விநியோகத்திற்கான பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதிகள் வழங்கப்பட்டு வருகின்றனவே தவிர, கடந்த 10 ஆண்டுகளுக்குள் இதுவரை எதனையும் நடைமுறைப்படுத்தப்படவில்லையென இப்பகுதி மக்கள் வேதனையுடன் கூறுகின்றனர். தாங்கள் தண்ணீர் தேடி அலையும் அவலத்தை அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் தொடர்ந்து வேடிக்கையாக பார்க்கின்றார்களா என்று பிரதேச மக்கள் கேட்கின்றனர்.

**யதுபாஸ்கரன்...**
*(பரந்தன் குறூப் நிருபர்)*

# கிழக்கின் குரல்



## வாழைச்சேனையில் இடிமின்னல் தாக்கத்தினால் பல வீடுகளுக்கு சேதம்

**மட்டக்களப்பு குறூ நிருபர்**



மட்டக்களப்பு வாழைச்சேனையில் நேற்று முன்தினம் (25) பிற்பகல் வேளையில் ஏற்பட்ட இடிமின்னல் தாக்கம் காரணமாக பிரதேசத்தில் வீடு மற்றும் மின்சாரப் பொருட்கள் பல சேதமடைந்துள்ளன.

வாழைச்சேனை விநாயகபுரத்தில் பிற்பகல் வேளையில் இரண்டு வீடுகளில் இச்சம்பவம் நடந்துள்ளது.

தென்னை மரங்களில் இடிமின்னல் தாக்கம் ஏற்பட்டதனால் தீ பற்றியுள்ளது. தீயானது வீட்டின் கூரையின் மீது பரவியதையடுத்து சம்பவம் அறிந்த அயலவர்கள் தீ பரவாமல் தடுத்துள்ளனர்.

இதேவேளை குறித்த வீடுளில் வசித்தோர் உறவினர்களின் வீடுகளுக்கு சென்றிருந்ததால் உயிர் சேதம் எதுவும் ஏற்படாமல் தடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் குறித்த பிரதேசத்தில் பல வீடுகளில் பாவனையில் இருந்த மின்பாவனைப் பொருட்கள் பல சேதமடைந்துள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர்.

## கிழக்கின் பல்துறைக் கலைஞர் கலைக்கோட்டன் காலமானார்



மட்டக்களப்பு பிரதேசத்தில் இலக்கியத்துறையில் தடம் பதித்தவரும், 'கலைக்கோட்டன்' என அழைக்கப்பட்டவரும், மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளராகப் பணியாற்றியவருமான அழகையா இருதயநாதன் மட்டக்களப்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை(25) காலமானார்.

மட்டக்களப்பு, பாலமீன்மடு கிராமத்தில் 1949.5.17 ஆம் திகதி அழகையா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்த அவர், சிறுவயதிலேயே கலை இலக்கிய ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார். ஆசிரியையான தயாநிதியை கரம்பிடித்த அவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

அவர் தனது ஆரம்பக்கல்வியை பாலமீன்மடு கிராமத்தின் அரசினர் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியையும், உயர்தரக்கல்வியையும் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும் கற்று ஆசிரியர் நியமனம் பெற்றார். மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் அவர் ஆசிரியர் பணியை முதலில் முன்னெடுத்தார்.

அதன் பின்னர் அதிபர் பரீட்சையில் சித்தியடைந்து மட்டக்களப்பு நரிப்புல்தோட்டம் அரசினர் பாடசாலை, மகிழவெட்டுவான் மகாவித்தியாலயம், மட்டக்களப்பு திரேசா பெண்கள் பாடசாலை, பாலமீன்மடு அரசினர் பாடசாலை ஆகியவற்றில் அதிபராக இருந்து காத்திரமான கல்விப் பணிகளை ஆற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

அவரது தந்தையார் நாட்டுக் கூத்துக்கலைஞராக புகழ் பெற்றிருந்தார். சமூக சீர்திருத்த விடயங்களை கருப்பொருளாக வைத்து பல கூத்துக்களை அரங்கேற்றினார். தனது தந்தையாரின் கலைத்துறையை பின்பற்றி கலைஞர் கலைக்கோட்டன் கலைஞராகத் திகழ்ந்தார்.

கவிதை, சிறுகதை, நாடகம், சினிமா, கூத்துக்கலை, குறுந்திரைப்படங்கள் படைத்தல், தொலைக்காட்சி நாடகங்களை எழுதுதல், இசைஅமைத்தல், இசைக்கோர்ப்பு செய்தல், சாரணர் வேலைத்திட்டம் என தன்னை பலவிடயங்களிலும் அர்ப்பணித்து செயற்பட்டார். இவர் சிறுகதைக்காக கிழக்குமாகாண கல்வி, கலாசார, பண்பாட்டு திணைக்களத்தினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கிழக்கு மண்ணின் ஒரு மாபெரும் கலைஞனாக அவர் பணியாற்றினார். அவரது மறைவு கலைத்துறைக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். கலைக்கோட்டன் என அழைக்கப்படும் அழகையா இருதயநாதன் கவிதை, சிறுகதை, இலக்கியம், நாடகம், சினிமா கூத்துக்கலை, குறும் திரைப்படம் என எல்லா துறைகளிலும் புகழ் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**க.விஜயரெத்தினம்**
**(வெல்லாவெளி தினகரன் நிருபர்)**



உலக வங்கியின் நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் சமுர்த்திப் பயனாளிகளுக்கும், குறைந்த வருமானம் பெறும் காத்திருப்பு பட்டியலில் உள்ள பயனாளிகளுக்குமான, 5000/ கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளரின் வழிகாட்டலில் உதவிப் பிரதேச செயலாளர் எப். நஹீஜா முஸாபிர் தலைமையில் அட்டாளைச்சேனை சமுர்த்தி வங்கி, வலய அலுவலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (படம்: திராய்கேணி நிருபர்)

## மகளிருக்கான உலர் உணவுப் பொதிகள்

**மட்டக்களப்பு விசேட நிருபர்**



தற்போதைய பொருளாதார நெருக்கடியான காலப்பகுதியில் தேவையுடைய மகளிருக்கான மனிதாபிமான முயற்சியாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று (26) மட்டக்களப்பு காந்திப் பூங்காவில் இடம்பெற்றது.

கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் 'தாயின் சமையல் அறை' எனும் தொனிப்பொருளில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட விதவைகள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் மற்றும் விசேட தேவையுடையோர் என தெரிவு செய்யப்பட்ட 250 குடும்பங்களுக்கு தலா ரூபாய் 5,000 பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

குறித்த நிறுவனமானது மாவட்டத்தில் பல்வேறு மனிதாபிமானப் பணிகள் செய்து வருவதோடு இதற்கு முன்பு மாவட்டத்தில் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டதாகவும் கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புகாரி முகமட் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பொருளாதார நெருக்கடியின் மத்தியில் மக்களை விழிப்படையச் செய்யும் பால் நிலை சமத்துவம் மற்றும் அரசியலில் பெண்களுக்கான சமத்துவம் வழங்கப்படவேண்டியதை வலியுறுத்தி வீதி நாடகமும் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன், மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## அட்டாளைச்சேனையில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

**பாலமுனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனையில் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி உப பொலிஸ் பரிசோதகர் நூர்தீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து 570 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர் அக்கரைப்பற்று மேலதிக மாவட்ட/ நீதவான் நீதிமன்ற நீதிபதி கே.எல்.எம். சாஜீத் முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை (24) ஆஜர்படுத்திய போது சந்தேக நபரை எதிர் வரும் ஐந்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

## வீட்டு உபகரணங்களை திருடிய எட்டுப் பேர் கைது

**கந்தளாய் தினகரன் நிருபர்**



திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஒன்பது இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டு உபகரணங்களை திருடிய எட்டுப்பேரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மற்றும் பாலையூற்று பகுதியைச் சேர்ந்த 25வயதிலிருந்து 45 வயதுக்குட்பட்ட எட்டுப்பேரையே கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை பகுதியுள்ள வீடொன்றினை உடைத்து மின்விசிற, தையல் இயந்திரம், ஒலி பெருக்கி சாதனங்கள், இசைக்கருவி மற்றும் மின்னழுத்தி போன்ற உபகரணங்களை திருடி விற்பனை செய்துள்ளதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## இரண்டு மாதங்களின் பின் தம்பலகாமத்தில் எரிவாயு விநியோகம்

**தம்பலகாமம் குறூப் நிருபர்**



திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிறிஜ் நகர் 97 ஆம் கட்டை சந்தியில் லிட்ரோ எரிவாயு நேற்று முன்தினம் (25) மாலை விநியோகிக்கப்பட்டது.

சுமார் இரண்டு மாதங்களுக்கும் மேலாக சமையல் எரிவாயு விநியோகிக்கப் பட வில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் கொட்டும் மழையிலும் மிக நீண்ட வரிசையில் காத்திருந்து இதனை பெற்றனர். 850 எரிவாயு இதன் போது மே மாத மின்சார பட்டியலை வைத்து வழங்கப்பட்டன.

## அக்கரைப்பற்றில் கடந்த இரண்டு வாரங்களில் 15 டெங்கு நோயாளர்கள்

**ஒலுவில் விசேட நிருபர்**

அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் கடந்த இரண்டு வாரங்களில் 15 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக, அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் எப்.எம்.ஏ.காதர் தெரிவித்தார்.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனைக்கமைய வாரத்தில் ஒரு மணித்தியாலம் எனும் வேலைத் திட்டத்திற்கமைய ஒவ்வொரு வீடுகளுக்கும் டெங்கு பரிசோதனை அட்டை வழங்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

வீட்டு உரிமையாளர்கள், வீடு மற்றும் சுற்று புறச் சுழலை வாரத்தில் ஒரு மணித்தியாலம் துப்பரவு செய்து அது தொடர்பான விபரத்தினை டெங்கு பரிசோதனை அட்டையில் குறிப்பிட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

## திருகோணமலை பொது வைத்தியசாலையில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி

**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை பொது வைத்தியசாலையில் அதிகளவான காய்ச்சல் சளி காரணமாக அனுமதிக்கப்பட்ட நிலையில் குறித்த நபருக்கு மேற்கொள்ளப்பட்டஅண்டிஜன்பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டவருக்கு அண்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோதுதொற்றுஉறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்று உறுதியானவர் கிண்ணியா சுகாதார வைத்திய பணிமனையில் கடமை ஆற்றி வரும் 51 வயது உடைய பொது சுகாதார பரிசோதகர் எனவும் தெரிய வருகின்றது.

இதே வேளை குறித்த பொது சுகாதார பரிசோதகருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையின் மூலம் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் கடமை நேர வைத்திய பொறுப்பதிகாரி குறிப்பிட்டார்.

அத்துடன் தற்பொழுது கொரோனா தொற்று பரவிக் கொண்டு வருவதினால் முகக் கவசங்களை அணியுமாறும், சமூக இடைவெளிகளை பேணி நடந்து கொள்ளுமாறும், கைகளை தொடர்ச்சியாக கழுவுமாறும் திருகோணமலை பிராந்திய சுகாதார திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## வருமானம் குறைந்தவர்களுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கி வைப்பு

**திராய்க்கேணி நிருபர்**



அக்கரைப்பற்று தக்வா ஜும்மா பள்ளிவாசல் நிறுவனத்தினால் பொருளாதார நெருக்கடியை சமாளிக்கும் முகமாக வருமானம் குறைந்த மக்களுக்காக அரிய இன கருங்கோழிக் குஞ்சுகள் வழங்கி வைக்கப்பட்டது.

அக்கரைப்பற்று பிரதேச செயலாளரின் வழிநடத்தலின் மூலம் சமுர்த்தி முகாமையாளர்களின் மேற்பார்வைக்கமைவாகவும், பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் குறித்த சில பிரிவு மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இதில் தக்வா ஜும்மா பள்ளிவாசல் நிருவாகத்தினர், சமுர்த்தி திட்ட முகாமையாளர் என்.ரீ. மஸூர், திட்ட உதவியாளர் எம்.ஏ. முஹாஜிர் மற்றும் பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## கதிர்காம பாதயாத்திரை வழியில் வெள்ளம்

**காரைதீவு குறூப் நிருபர்**

ஆயிரக்கணக்கான கதிர்காம பாதயாத்திரை அடியார்கள் உறங்கிகொண்டிருந்த வேளையில் திடீரென ஏற்பட்ட வெள்ளத்தால் அடியார்கள் அல்லோலகல்லோலப்பட்டார்கள்.

இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றது. பாரம்பரிய பாதயாத்திரை வரலாற்றில் இப்படி நடந்தது இதுவே முதல் தடவையாகும். விடிய விடிய மழை பொழிந்து கொண்டிருந்தது.

வெள்ளத்தால் திடீரென வியாழை ஆற்றின் நீர் மட்டம் 5 அடி வரை உயர்வடைந்தது. இதனால் அடியார்கள் திக்குமுக்காடினர். அடியார்கள் காட்டுக்குள் ஓடினர். ஆனால் அவர்களது உடைமைகளை காப்பாற்ற முடியாமல் போய்விட்டது.

## ஆலமரத்தில் ஆணின் சடலம் மீட்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவில் உள்ள மகிழடித்தீவு பிரதேசத்தில் ஆலமரத்தில் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்ட நிலையில் ஆண் ஒருவரின் சடலம் திங்கட்கிழமை (25) காலையில் மீட்கப்பட்டுள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிசார் தெரிவித்தனர்.

மகிழடித்தீவு பாடசாலை வீதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 37 வயதுடைய குமாரசாமி திலகேஸ்வரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் குடும்ப பிரச்சினை காரணமாக சம்பவதினமான ஞாயிற்றுக்கிழமை இரவு வீட்டின் கிணற்றில் குதித்து தற்கொலை செய்ய முயன்ற போது காப்பாற்றப்பட்டார். இதனை தொடர்ந்து அந் நபரின் மனைவி நேற்று முன்தினம் அதிகாலை ஆடை தொழிற்சாலைக்கு வேலைக்கு செல்ல எழுந்து கணவரை தேடிய போது அவர் வீட்டில் இல்லாத நிலையில் அவர் அருகில் சென்றிருக்கலாம் என நினைத்து அவர் வேலைக்கு சென்றுள்ளார்.

இந்த நிலையில் குறித்த நபர் நேற்று கால 8.30 மணிளவில் ஆலமரத்தில் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இதையடுத்து நீதிமன்ற உத்தரவுக்கமைய சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக மட்டு போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

### நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தைமீறிய

## வர்த்தகர்களுக்கு நீதிமன்றம் 06 இலட்சம் ரூபா அபராதம்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஜுலை மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 06 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி தெரிவித்தார்.

இக்கட்டான கால கட்டத்தில் கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து அம்பாறை, தெஹியத்தக்கண்டி, பொத்துவில், அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸின் ஆலோசனைக்கமைய பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தலைமையில் சுற்றி வளைப்புகளை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்டதாக தெரிவித்தார்.

# மாகாண கல்வித் திணைக்களம்

## வடமேல் மாகாணம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**விஷேட கல்வி உபகரணங்களின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்**
**நூலக தளபாட வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்**
**கணித அலகு மற்றும் ஆங்கில அலகுகளுக்கு உபகரணங்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்**
**கணினிகள் மற்றும் துணைப்பாகங்களின் வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல்**
**விளையாட்டுத்துறை பண்டங்களுக்கான வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்**
**அழகியல் உபகரணங்களின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்**
**கமத்தொழில் உபகரணங்களின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்**
**மனையியல் விஞ்ஞான உபகரணங்களின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்**
**ஆரம்ப செயற்பாட்டு அறை உபகரண தொகுதியின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்**

## செயற்றிட்டத்தின் பெயர்: பொது கல்விக்கான நவீனமயமாக்கல் செயற்றிட்டம்

01. 01 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு விஷேட கல்வி உபகரணங்களின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல், நூலக தளபாட வழங்கல் மற்றும் ஒப்படைத்தல், கணித அலகு மற்றும் ஆங்கில அலகுகளுக்கு உபகரணங்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல், கணினிகள் மற்றும் துணைப்பாகங்களின் வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல், விளையாட்டுத்துறை பண்டங்களுக்கான வழங்கல் மற்றும் ஒப்படைத்தல், கமத்தொழில் உபகரணங்களின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல், ஆரம்ப செயற்பாட்டு அறை உபகரண தொகுதியின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வட மேல் மாகாண மாகாண கல்விப் பணிப்பாளரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

Table 01

| Bid Code No. | Lot | Item No. | Description | Quantity (Unit) | Bid Security (LKR) | Non Refundable Tender Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|
| NWP/EDU/ProAcc/07/3-7/GEM/2022 | **Supply & Delivery of Special Education Equipment** | | | | | |
| | 01. | i | Trampoline delux - 125 | 100 | 30,000.00 | 1,000/- |
| | | ii | Reebok Gym Ball (55 cm) | 100 | | |
| | | iii | Brail Slate | 100 | 3,500.00 | |
| | | iv | Brail Style | 100 | | |
| | | v | White Board | 10 | 1,000.00 | |
| | **Supply & Delivery of library furniture** | | | | | |
| NWP/EDU/ProAcc/07/3-8/GEM/2022 | 02. | i | Library tables | 40 | 200,000.00 | 3,500/- |
| | | ii | Library chairs | 320 | | |
| | | iii | Book racks | 20 | | |
| | | iv | Magazine rack | 10 | | |
| | | v | Librarian table with catalogue box | 10 | | |
| | | vi | Librarian chair | 10 | | |
| | | vii | Glass almirah | 10 | | |
| NWP/EDU/ProAcc/07/3-9/GEM/2022 | **Supply & Delivery of Equipment to Special Education, Mathematic Unit & English Unit** | | | | | |
| | 03. | i | Smart Board | 08 | 48,000.00 | 2,000/- |
| | | ii | Laptop Computer | 06 | 15,000.00 | |
| | | iii | Printer with Photocopier | 06 | 15,000.00 | |
| | 04. | i | Trapezoid Table | 48 | 11,100.00 | 1,000/- |
| | | ii | Chair | 90 | | |
| | 05. | 21 Items | Mathematical Box with Instrument | 24 | 15,500.00 | 1,000/- |
| NWP/EDU/ProAcc/07/3-14/GEM/2022 | **Supply & Delivery & Installation of Computers & Accessories** | | | | | |
| | 06. | i | Computers | 58 | 200,000.00 | 3,500/- |
| | | ii | UPS | 58 | | |
| NWP/EDU/ProAcc/07/3-15/GEM/2022 | **Supply & Delivery of Aesthetic Equipment** | | | | | |
| | 07. | i | Harmonium | 23 | 34,000.00 | 2,000/- |
| | | ii | Violine | 30 | | |
| | | iii | Organ | 15 | | |
| | | iv | Kandyan Drum | 25 | | |
| | | v | Low Country Drum | 25 | | |
| | | vi | Thammettama | 28 | | |
| | | vii | Daula | 23 | | |
| | | viii | Hand Raban | 10 | | |
| | | ix | Talampota | 98 | | |
| | | x | Symbol | 25 | | |
| NWP/EDU/ProAcc/07/3-12/GEM/2022 | **Supply & Delivery of Sports Goods** | | | | | |
| | 08. | i | Volleyball | 155 | 50,000.00 | 2,000/- |
| | | ii | Volleyball net | 155 | | |
| | | iii | Netball | 155 | | |
| | | iv | Football | 155 | | |
| | | v | Throwball | 155 | | |
| | | vi | Throwball net | 155 | | |
| | | vii | Javelin 500g | 155 | | |
| | | viii | Javelin 700g | 155 | | |
| | | ix | Relay button | 155 | | |
| | | x | Starting block | 155 | | |
| NWP/EDU/ProAcc/07/3-13/GEM/2022 | **Supply & Delivery of Agriculture Equipment** | | | | | |
| | 09. | i | Bell Jar | 50 | 50,000.00 | 2,000/- |
| | | ii | Drying oven | 50 | | |
| | | iii | Hand forks | 250 | | |
| | | iv | Hand saws | 250 | | |
| | | v | Hand shear | 250 | | |
| | | vi | Hand shovel | 250 | | |
| | | vii | Knife | 250 | | |
| | | viii | Lactometer | 100 | | |
| | | ix | Mammoty 9" x 9" | 250 | | |
| | | x | Mammoty fork | 100 | | |
| | | xi | Rake | 100 | | |
| | | xii | Secateur | 250 | | |
| | | xiii | Shovel | 100 | | |
| | | xiv | Rain gauge | 50 | | |
| | | xv | Soil Auger | 50 | | |
| | | xvi | Knapsack Sprayer | 50 | | |
| | | xvii | Watering cans (Plastic) | 200 | | |
| | | xviii | Wheel barrow | 50 | | |
| | | xix | Budding knife | 250 | | |
| | | xx | Desiccator with silica jell | 50 | | |
| | | xxi | Digital balance (0- 1500g) | 50 | | |
| | | xxii | Dissecting set | 50 | | |
| | | xxiii | Electrical conductivity meter with calibration solution | 200 | | |
| | | xxiv | Hydrometer (152 H) | 100 | | |
| | | xxv | Hand lens | 200 | | |
| | | xxvi | Max/Mini Thermometer | 100 | | |
| | | xxvii | Microscope 20 x 75 | 50 | | |
| | | xxviii | PH meters with buffers (hand held) | 100 | | |
| | | xxix | Sieve | 50 | | |
| | | xxx | Soil thermometers | 100 | | |
| | | xxxi | Wet & dry bulb thermometer | 100 | | |
| | | xxxii | Calibration thermometer | 50 | | |
| | | xxxiii | Turbidity tube (for surface water) | 50 | | |
| | | xxxiv | pH paper set | 50 | | |
| | | xxxv | Soil colour chart | 50 | | |
| | | xxxvi | Dispersing solution | 50 | | |
| | | xxxvii | Soil sample can | 50 | | |
| | | xxxviii | Plant Colour guide | 50 | | |
| NWP/EDU/ProAcc/07/3-11/GEM/2022 | **Supply & Delivery of Home Science Equipment** | | | | | |
| | 10. | i | Refrigerator | 32 | 50,000.00 | 2,000/- |
| | | ii | Gas cooker | 32 | | |
| | | iii | Oven | 32 | | |
| | | iv | Pressure cooker | 32 | | |
| | | v | Non-stick pan set | 32 | | |
| | | vi | Blender | 32 | | |
| NWP/EDU/ProAcc/07/3-10/GEM/2022 | **Supply & Delivery of Primary Activity Room Equipment Set** | | | | | |
| | 11. | 19 Items | Primary Activity Room Equipment Set | 16 | 16,000.00 | 1,000/- |

02. தொகுதியின் முழுமையான எண்ணிக்கைகளுக்கான விலைகள் முன்வைக்கப்படல் வேண்டுமென்பதுடன் தொகுதி இல.: 1,2,4 மற்றும் 6 இற்கான தொகுதியிலுள்ள அனைத்து உருப்படிகளுக்கும் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தொகுதி இல.: 3,5,7,8,9,10 மற்றும் 11 இற்கான தொகுதியிலுள்ள அனைத்து உருப்படிகளுக்கும் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுள் ஒப்பந்தமானது பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

03. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.

04. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை குருநாகல், கண்டி வீதி, வட மேல் மாகாண, மாகாண கல்வித் திணைக்கள பிரதான கணக்காளரிடமிருந்து பெற்று (தொலைபேசி/ தொலைநகல்: 037-2222422) மேற்குறிப்பிட்டுள்ள முகவரியில் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும்) விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

05. தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:

(i) கீழே குறிப்பிட்டுள்ளவாறு கடந்த மூன்று வருடங்களில் (2019-2021) நிகரான பண்டங்களை வழங்கியிருப்பதற்கான ஆகக்குறைந்த சராசரி நிதிப்புரள்வு பின்வருமாறு:

| Lot No. | Turnover |
|---|---|
| 01 | Rs.1 million |
| 02 | Rs. 10 million |
| 03 | Rs. 4.5 million |
| 04 | Rs. 0.5 million |
| 05 | Rs. 3.2 million |
| 06 | Rs. 10 million |
| 07 | Rs. 1 million |
| 08 | Rs. 2 million |
| 09 | Rs. 2 million |
| 10 | Rs. 2 million |
| 11 | Rs. 0.5 million |

(ii) தேவைப்படும் உருப்படிகளை வழங்குவதில் ஆகக் குறைந்தது 3 வருட கடந்த கால அனுபவம்.

(iii) விலைமனுதாரரானவர் வேலைத்தளமொன்றையும் தொழில்நுட்பரீதியிலான மற்றும் தேர்ச்சியுள்ள பணியாளர் குழுவொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) விலைமனுதாரரானவர் முகவரொருவரை/ வட மேல் மாகாணத்தில் நிரந்தரமான உபஅலுவலகமொன்றை கொண்டிருத்தல் வேண்டும் (3 மற்றும் 6 ஆம் தொகுதி இலக்கங்களுக்கு மாத்திரம்)

(v) விலைமனுதாரரானவர் கையிருப்பை வைத்திருத்தல் வேண்டும்.

(vi) 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழான பதிவுச் சான்றிதழ் (1,2 மற்றும் 6 ஆவது தொகுதிகளுக்கு மாத்திரம்)

6. 2022 ஜுலை 27 ஆம் திகதியிலிருந்து 2022 ஓகஸ்ட் 16 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் ( வெள்ளிக்கிழமைகள் நீங்கலாக) அலுவலக நேரங்களில் (மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும்) 01 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தை வட மேல் மாகாண, மாகாண கல்விப் பணிப்பாளருக்கு செலுத்திய பின்னர், கீழேயுள்ள 8 ஆம் பந்தியிலுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

2022 ஓகஸ்ட் 10 ஆம் திகதியன்று கீழேயுள்ள 7 ஆம் பந்தியில் 2 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு, வழங்கப்பட்டுள்ள முகவரியிலுள்ள மாகாண கல்வித் திணைக்களத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

| Lot No. | Time |
|---|---|
| 01 | 9.00 hrs |
| 02 | 9.30 hrs |
| 03 | 10.00 hrs |
| 04 | 10.30 hrs |
| 05 | 11.00 hrs |
| 06 | 11.30 hrs |
| 07 | 12.30 hrs |
| 08 | 1.00 hrs |
| 09 | 1.30 hrs |
| 10 | 2.00 hrs |
| 11 | 2.30 hrs |

07. முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Bid for Bid Code No…………………..** என குறிப்பிடப்பட்டு 2022 ஓகஸ்ட் 17 ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் விலைமனுக்கள் இரு பிரதிகளில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது குருநாகல், கண்டி வீதி, வடமேல் மாகாண, மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள 'கேள்விப் பெட்டியில்' சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2022 ஓகஸ்ட் 17 ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணிக்கு 8 ஆம் பந்தியிலுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். மேலே குறிப்பிட்டுள்ளவாறான ''விலைமனுப்பிணையொன்றுடன்'' அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இந்த கொள்வனவு தொடர்பான அனைத்து மாற்றங்களும் எமது இணையதளத்தில் காட்சிப்படுத்தப்படும்.

08. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:

**A.S.K. Jayalath,**
**தலைவர்,**
**திணைக்கள கொள்வனவுக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம் (வமேமா),**
**கண்டி வீதி, குருநாகல்.**
**தொலைபேசி: 037-2222422, தொலைநகல் இலக்கம்: 037-2222422**
**இணைய முகவரி: www.nwpedu.lk**

**திகதி: 27.07.2022**

## பங்குதாரர்களுக்கான அறிவித்தல்
## ரம்பொட ஃவ்போல்ஸ் பிவிசி – PV/PB 8234 PQ
## வருடாந்த அறிகையின் டிஜிட்டல் பிரதி

2022 மே 27 ஆம் திகதியிடப்பட்ட கொழும்பு பங்கு பரிவர்த்தனையினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைக்கு மேலாக தற்போது நிலவும் சூழ்நிலைமை காரணமாக ரம்பொட ஃவ்போல்ஸ் பிவிசி ஆனது 2022 மார்ச் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த நிதியிடல் தொடர்பான கம்பனியின் கணக்குகளை அடக்கிய வருடாந்த அறிக்கையை பின்வரும் இணையதளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

அ. கூட்டுரு இணையதளம்: **www.rambodafalls.com**

ஆ. கொழும்பு பங்கு பரிவர்த்தனை : **www.cse.lk**

மேற்குறிப்பிட்டுள்ள விடயம் தொடர்பாக மேலான விபரங்களை அல்லது தெளிவுறுத்தல்களை நீங்கள் அறிய விரும்பினால் கம்பனியின் திரு. குசும் விக்ரமகே என்பவருடன் 0704353950 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக மற்றும் **financeramboda@gmail.com** என்ற மின்னஞ்சலூடாகவும் தொடர்பு கொள்ளலாம்

கம்பனியின் வருடாந்த பொதுக் கூட்டமானது 2022 ஓகஸ்ட் 18 ஆம் திகதியன்று மெய்நிகராக்கல் கூட்டமொன்றாக நடைபெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2022 ஜூலை 25 ஆம் திகதியன்று.**


## வாகன விற்பனை

| மோட்டார் | வாகனம் | வருடம் | இடம் |
|---|---|---|---|
| CAY-4073 | சுசுகி/வேகன் ஆர் | 2018 | ராகமா |
| JK-1010 | ஹோண்டா | 2004 | ராகமா |

மேலே காணப்படும் வாகனம் எமது இடத்தில் பரீட்சித்து பார்ப்பதுடன் Auction முறையில் விலைக்கு வழங்கப்படும்

ராகமா - 0113 288 893

LB FINANCE
எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி.
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.


## இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
### வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் (CEDPL)

## தொழில்சார் உளவளத்துணை டிப்ளோமா கற்கைநெறி (Professional Diploma in Counselling)
### கற்கைநெறிக்கு பயிலுனர்களை இணைத்துக் கொள்ளல் – 2022 / 2023

தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் நடாத்தப்படும் தொழில்சார் உளவளத்துணை டிப்ளோமா கற்கைநெறியினை பயில விரும்பும் தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தேவைப்படும் தகைமைகள்** : க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் சித்தியுடன் அடிப்படை உளவளத்துணைத் திறன்கள்

**கற்கைநெறிக் காலம்** : ஒன்றரை வருடங்கள் (பகுதிநேர வகுப்பறைக் கற்கை ஒரு வருடம், வெளிக்களப் பயிற்சி - ஆறு மாதங்கள்)

**கட்டணம்** : ரூபா. 75,000.00 (இவை மூன்று தவணைக் கட்டணங்களில் செலுத்த முடியும்)

**மொழி மூலம்** : தமிழ்

**தெரிவு செய்யப்படும் முறை** : கல்வித்தகைமை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

**விண்ணப்ப முடிவுத் திகதி** : 25.08.2022

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பத்தினை செயற்படுத்துவதற்கான கட்டணமாக ரூபா. 300.00 ஐ செலுத்த வேண்டும். இக்கட்டணத்தினை, பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற பற்றுச் சீட்டு (Paying-In-Voucher - PIV) ஊடாகவே, எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் செலுத்த முடியும். விண்ணப்பப்படிவங்களையும் பற்றுச் சீட்டினையும் நேரடியாகவும் அல்லது பல்கலைக்கழக இணையத்தளமான www.seu.ac.lk இல் பதிவிறக்கம் செய்தும் பெற்றுக்கொள்ளலாம். கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டினை (PIV – University Copy) கழறாதபடி விண்ணப்பப்படிவத்தில் ஒட்ட வேண்டும். அதற்கமைய முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை பிரதி பதிவாளர், வெளிவாரி பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில் என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தொழில்சார் உளவளத்துணை டிப்ளோமா கற்கைநெறி (2022 / 2023" எனக்குறிப்பிட வேண்டும். பூரணப்படுத்தப்படாத அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு:** போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்காத பட்சத்தில் குறிப்பிட்ட கற்கைநெறி நடாத்தப்பட மாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்க.

**பதிவாளர்**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**
**ஒலுவில்**
**22.07.2022**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### நீர்ப்பாசன அமைச்சு
### மகாவலி நீர்ப் பாதுகாப்புக்கான முதலீட்டுத்திட்டம் (MWSIP)
### திட்ட முகாமைத்துவப் பணிமனை (PMU)
**நிதி வழங்கல்: ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) - கடன் இலக்கம் - 3625-SRI-Tranche 2**

# விலைமனுக் கேரல்

## திறந்த போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

## 2022/23 பெரும்போக நெல் விளைச்சலுக்குத் தேவையான இரசாயனப் பசளை (MOP) பெறுகை

**MI/MWSIP/ADB/GDS/MOP FERTILIZER/ICB/2022/037**

1. மகாவலி நீர்ப்பாதுகாப்புக்கான முதலீட்டுத் திட்டத்தின் (MWSIP) ஆகு செலவிற்காக இலங்கை சனநாயக சோஷ லிசக் குடியரசிற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி (ABB) மூலம் நிதியிடலைப் பெற்றுள்ளதுடன் அத்தொகையின் பகுதியொன்றை மேற்படி ஒப்பந்தத்திற்காக செலவிட உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகைமையும் வளமும் பொருந்திய நாடுகளின் விலைமனுதாரர்கள் இவ் விலைமனுவில் பங்குபற்றலாம்.
2. அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலைபேறான பெறுகைக்குழுவின் (SCAPC) தலைவர் சார்பாக நீர்ப்பாசன அமைச்சின் மகாவலி நீர்ப்பாதுகாப்புக்கான முதலீட்டுத்திட்ட (MWSIP) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ அலகின் (PMU) நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர்/ கொள்வனவாளரினால் 2022/23 பெரும்போக நெல் பயிர்ச்செய்கைக்குத் தேவையான இரசாயனப் பசளை (MOP) 40,000 மெ.தொன் பெறுகைக்காகத் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக் கோரப்படுகின்றது.
3. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் தனிகட்ட ஒற்றைக் கடிதவுறை விலைக் கோரல் முறைமையின் கீழ் திறந்த போட்டிரீதியிலான விலைமனு முறைமையின் பிரகாரம் இவ் விலைமனுக் கோரப்படும். விலைமனுக் கோரலானது, விலைமனுப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகைமையுள்ள அனைத்து நாடுகளிலுள்ள விலைமனுதாரர்களும் பங்குபற்றலாம்.
4. இந்த விலைமனுக் கோரலில் பின்வரும் பிரதான தகைமைகளையுடைய தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மாத்திரமே பங்கு பெறுவதற்கு அழைக்கப்படுகின்றனர்.
   - உடனடியான கடந்த (3) மூன்றாண்டுகளில் விலைமனுதாரரினால் இரசாயனப் பசளையை வழங்கி முடிவுறுத்திய ஒப்பந்தங்களிற்காக பெற்றுக்கொண்ட சான்றளிக்கப்பட்ட மொத்த தொகையான கணக்கிடப்பட்ட வருடாந்த ஆகக் குறைந்த சராசரி நிதிப்புரள்வான தொகையான 100 மில்லியன் அமெரிக்க டொலரைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர், உடனடியான கடந்த (3) மூன்றாண்டுகளில் குறைந்தபட்சம் இரண்டு (2) ஒப்பந்தங்களில், ஒப்பந்தக்காரராக, கூட்டு முயற்சி பங்குதாரராக (Joint Venture Partner) அல்லது உப ஒப்பந்தக்காரராக இரசாயனப் பசளை வழங்கியிருத்தல் வேண்டுமென்பதுடன் குறித்த ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அதில் விலைமனுதாரரின் பங்கு பெறும் பெறுமதியானது, 40 மில்லியன் அமெரிக்க டொலர் அல்லது அதற்குச் சமமாக இருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் முன்வைக்கும் இரசாயனப் பசளை உற்பத்தி தொடர்பாக குறைந்தபட்சம் (03) மூன்று வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன், அவ்விபரக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள இரசாயனப் பசளை அல்லது அவ்விபரக்குறிப்புகளுக்கு நிகரான உற்பத்தி, குறைந்தபட்சம் 40,000 மெ.தொன் உடனடியான (3) மூன்று வருடங்களில் விற்பனை செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் அல்லது உற்பத்தியாளரினால் முன்வைக்கப்படும் இரசாயனப் பசளை, வழங்கப்படக்கூடிய வகை, அளவு மற்றும் எண்ணிக்கையானது, கொள்வனவாளரின் தேவையின் பேரில், அறிவிக்கப்படும் தினங்களில் குறிப்பிடப்படும் முகவரிகளுக்கு ஏற்றி இறக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
   - விலைமனு மாதிரிப்படிவம் FIN-3 இல் சுட்டிக்காட்டியவாறு விலைனுதாரரின் திரவச் சொத்துக்கள் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்காகக் கடன் வசதிகள் அல்லது ஏனைய நிதி மூலங்கள் (ஒப்பந்தத்திற்கான முற்கொடுப்பனவு தவிர்ந்த) இருப்பதை காட்சிப்படுத்தல் வேண்டும்.
5. முழுமையான தகுதித்தன்மை மற்றும் தகைமை தேவைப்படுத்தல்களுக்கு, விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தைப் பார்வையிடல் வேண்டும்.
6. www.mwsip.lk - information - Procuments of MWSIP என்ற இணையத்தில் எந்தவொரு ஆர்வமுள்ள விலைமனுதாரரினாலும் பரீட்சிப்பதற்காக விலைமனு ஆவணத்தின் மென் பிரதியொன்றை PDF உருமாதிரியில் பரீட்சித்துப்பார்க்கலாம்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர் விலைமனுக் கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்கான அவர்களின் உத்தேசம் மற்றும் விலைமனுவொன்றைச் சமர்ப்பிப்பதற்கான ஆர்வத்தை ebid.mwsip@gmail.com என்ற மின்னஞ்சலூடாக ஸ்கேன் செய்யப்பட்ட அறிவித்தலுடன் திட்டப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறான அறிவித்தல்கள் கட்டாயமாக விலைமனுதாரரின் தலைப்புக்கடிதத்தில் எழுதப்பட்டு, விலைமனு தாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியினால் கையொப்பமிட்டு விலைமனுக்கோரல் ஆவணத்தின் டிஜிட்டல் பிரதிகளை பெற்றுக்கொள்வதற்காகவும் விலைமனுக் கோரல் செயற்பாட்டின் போது வழங்கப்படவுள்ள மேலதிக தெளிவுறுத்தல்கள் மற்றும் சேர்க்கைக்காக விலைமனுதாரரின் பெயர் மற்றும் முகவரி, தொடர்பு இலக்கம், தொலைநகல் இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றையும் குறிப்பிடல் வேண்டும். விலைமனுதாரரின் கடிதத்தைப் பெற்றுக் கொண்ட பின்னா, சேவை வழங்குநர் மீளளிக்கப்படாத கட்டணமான 100,000.00 இலங்கை ரூபாவை அல்லது 290.00 அமெரிக்க டொலரைச் செலுத்துவதற்காக அவரது வங்கி கணக்கு விபரங்களை அறிவிப்பார். அவ்வாறான பணக் கொடுப்பனவை மேற்கொண்ட பின்னர், விரைவாகவே விலைமனுதாரர் பணம் செலுத்தப்பட்ட விடயத்தை உறுதிப்படுத்தி திட்டப் பணிப்பாளருக்கு அறிவிப்பார். விலைமனு தாரரினால், மீளளிக்கப்படாத பணக் கொடுப்பனவு செலுத்தப்பட்ட உறுதிப்பாடு கிடைத்தவுடன் சேவை வழங்குநர் முழுமையான விலைமனுக் கோரல் ஆவணத்தை பதிவிறக்கம் செய்வதற்கான தொடர்பை அறிவிப்பார், முழுமையான விலைமனுக் கோரல் ஆவணத்தை பதிவிறக்கம் செய்வதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளல் வேண்டுமென்பதுடன் இந்தப் பெறுகையின் செயற்பாட்டிலேற்படும் விளைவுகளுக்கும் அல்லது அதன் பின்னர் விலைமனுதாரரின் செயற்பாட்டிலேற்படும் தவறுகளுக்கும் சேவை வழங்குநர் பொறுப்பேற்க மாட்டார்.
8. செயற்றிட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் 2022 ஆகஸ்ட் 03ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு விலைமனுதாரர்களுடனான விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். அவ் வேளையில் விலைமனுதாரர்கள் சமுகமளித்திருக்கலாம் என்பதுடன் (சேவை வழங்குநருக்கு முன்னறிவிப்பு வழங்கி உயர்ந்த பட்சம் இரண்டு பிரதிநிதிகளைப் பதிவு செய்து) அன்றேல், வழங்கப்படும் மெய்நிகராக்கல் முறைமையூடாக தொடர்பு கொள்ளலாம். விலைமனுதாரர்கள் ஒன்லைன் நாட்டு வசதியொன்றை வழங்குவதற்காக 2022 ஆகஸ்ட் 01ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வேலைத்திட்டப் பணிப்பாளருக்கு மின்னஞ்சல் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.
9. அமைச்சரவையினால் நியமனஞ் செய்யப்பட்ட நிலைபேறான பெறுகைக்குழுவின் (SCAPC) தலைவருக்கு முன்வைக்கப்பட்ட, முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், விலைமனு ஆவணங்களின் (Section 2- Bid Data Sheet, ITB 21.1)இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறித்த பெறுமானத்திற்கான விலைமனுப்பிணையமொன்று அல்லது விலைமனுப்பிணைப் பிரகடனம் ஒன்றுடன் 2022 ஆகஸ்ட் 17 அன்று மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர், கொழும்பு 10, டீ.பீ. ஜாயா மாவத்தை, இலக்கம் 493/ 1/1 மகாவலி நீர்ப்பாதுகாப்பிற்கான முதலீட்டுத்திட்டம், வேலைத்திட்ட முகாமைத்துவ அலகு, வேலைத் திட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும். விலைமனுக்கள் மூடப்பட்டதும், உடனடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவை திறக்கப்படும். விலைமனுதாரர்கள் மெய்நிகராக்கல் முறைமையூடாகவும் விலைமனுத் திறத்தல் நிகழ்ச்சியில் பங்கு பற்றலாம். ஒன்லைன் மாநாட்டு வசதிக்கான தொடர்பை ஏற்படுத்துவதற்காக 2022 ஆகஸ்ட் 15ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக விலைமனுதாரர்கள் திட்டப்பணிப்பாளருக்கு விண்ணப்பமொன்றை மின்னஞ்சலொன்றின் வழியாக அனுப்பலாம்.
10. விலைமனுக்களைத் தயாரித்தல், விலைமனு முன் கூட்டத்திற்கு சமுகமளித்தல் மற்றும் விலைமனுக்களை ஒப்படைத்தல் ஆகியவற்றில் விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவு அல்லது செலவினங்களுக்கு கொள்வனவாளர் பொறுப்பேற்க மாட்டார்.

**திட்டப்பணிப்பாளர்,**
**திட்ட முகாமைத்துவ அலகு (PMU)**
**மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டுத்திட்டம் (MWSIP)**
**இல. 493 1/1, டீ.பீ. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10**
**இலங்கை**
**தொலைபேசி இல. +94 11 2675810**
**தொலைநகல் இல: +94 11 2675227**
**மின்னஞ்சல் முகவரி: ebid.mwsip@gmail.com**


Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.


CSIAP THE WORLD BANK

## விலைமனுக்களுக்கான அழைத்தல்
### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### விவசாய அமைச்சு
### தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல்
### காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)
செயற்றிட்ட இலக்கம் :P163742

# அறிவித்தல்

கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்காக விலைமனுக்களுக்கான கேள்வி விலைகள், காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பாக (கிழக்கு மாகாண) பிராந்திய பெறுகைக்குழுவின் தலைவரினால் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2022.07.07 அன்று தினகரன் பத்திரிகையின் பக்கம் 09, தினமின பக்கம் 15 மற்றும் டெயிலிநியூஸ் பக்கம் 22இல் பிரசுரிக்கப்பட்ட விலைமனு அறிவித்தல்களின் ஏனைய நிபந்தனைகளில் மாற்றமில்லை.

| No | Contract No | Description of Work | Civil Cost Rs. (Mn) |
|---|---|---|---|
| 01 | LK-MOA-266102-CW-RFB/EP/DPDO/ Rehb.T (9)/2022/002 | Rehabilitation of Nelumwewa in Ampara District | 26.796 |
| 02 | LK-MOA-276958-CW-RFB/EP/DPDO/ Rehb.T (118)/2022/017 | Rehabilitation of Vitpanaimadu Tank Peruvettai tank At Batticaloa District | 53.044 |
| 03 | LK-MOA-293193-CW-RFB/EP/ DPDO/ Rehb.T(01) /2022/020 | Rehabilitation of Alayadi Kulam Tank at Ampara District | 65.021 |
| 04 | LK-MOA-293196-CW-RFB/EP/ DPDO/ Rehb.T(04) /2022/021 | Rehabilitation of Kandahinda Wewa and Panakala Tank in Ampara District | 66.050 |
| 05 | LK-MOA-293299-CW-RFB/EP/ DPDO/ Rehb.T(05) /2022/022 | Rehabilitation of Tharapilavely Kulam tank in Batticaloa District | 44.043 |
| 06 | LK-MOA-293202-CW-RFB/EP/ DPDO/ Rehb.T(06) /2022/023 | Rehabilitation of Periyakalliluppaikulam in Trincomalee District | 33.959 |
| 07 | LK-MOA-293203-CW-RFB/EP/ DPDO/ Rehb.T(08) /2022/024 | Rehabilitation of Sinna Kalliluppai Kulam and Pahalagama Wewa in Trincomalee District. | 47.497 |
| 08 | LK-MOA-293198-CW-RFB/EP/ DPDO/ Rehb.T(09) /2022/025 | Rehabilitation of Mummarikulam in Ampara District | 23.482 |
| 09 | LK-MOA-293303-CW-RFB/EP/ DPDO/ Rehb.T(16) /2022/027 | Rehabilitation of Pullumalai Tank in Batticaloa District | 57.335 |
| 10 | LK-MOA-293201-CW-RFB/EP/ DPDO/ Rehb.T(18) /2022/028 | Rehabilitation of KallikattuKulam in Trincomalee District | 38.330 |
| 11 | LK-MOA-293194-CW-RFB/EP/ DPDO/ Rehb.T(20) /2022/029 | Rehabilitation of Meegahawewa, Nuga Wewa and Kudayalpoth Wewa in Ampara District | 40.348 |
| 12 | LK-MOA-293205-CW-RFB/EP/ DPDO/ Rehb.T(22) /2022/030 | Rehabilitation of Ralapanawewa in Trincomalee District | 38.826 |
| 13 | LK-MOA-293204-CW-RFB/ PMU(EP) Rehb.T(15)/2022/32 | Rehabilitation of Ramba Wewa and Madugaha Wewain Trincomalee District | 63.274 |
| 14 | LK-MOA-293195-CW-RFB/ PMU(EP) Rehb.T(24)/2022/35 | Rehabilitation of Kunappankeney Tank in Ampara District | 68.901 |
| 15 | LK-MOA-293297-CW-RFQ/ PMU(EP) Rehb.T(1)/2022/40 | Rehabilitation of Almishkudah Tank in Batticaloa District | 10.505 |
| 16 | LK-MOA-276979-CW-RFB/EP/DPDO/ Rehb. T(47)/2022/010 | Rehabilitation of Wedagamawewa in Ampara District | 49.796 |

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக்குழு, (கிழக்கு மாகாணம்)**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்**
**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (கிழக்கு மாகாணம்)**
**லவ் லேன், உப்புவெளி,**
**திருகோணமலை**

**திகதி : 2022.07.25**


BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
Dinamina Daily News Thinakaran
LAKE HOUSE

# கேள்வி அறிவித்தல்

நோர்வூட் பிரதேச சபை

## பொகவந்தலாவை நகரில் நிர்மாணிக்கப்படவுள்ள வியாபார தொகுதியின் மேல் மாடியின் கடையறைகளை நீண்டகால குத்தகையில் வழங்கல்

மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நோர்வூட் பிரதேச சபையின் கேள்விக்குழு தலைவராகிய என்னால் பொகவந்தலாவை நகரில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வியாபாரக் கட்டிடத் தொகுதியின் இரண்டாம் மாடியின் கடையறைகளை நீண்ட கால மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு கீழ்காணப்படும் தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

I. கேள்வி விண்ணப்பம் விநியோகித்தல் - 27.07.2022 முதல் 09.08.2022 மு.ப.9.00 முதல் பி.ப3.00 மணி வரை
II. கேள்வி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளல் - 27.07.2022 முதல் 10.08.2022 காலை 10.00 மணி வரை
III. கேள்வி திறத்தல் - 10.08.2022 காலை 10.30 மணிக்கு நோர்வூட் பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் திறக்கப்படும்.

**பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி**
**தவிசாளர்,**
**நோர்வூட் பிரதேச சபை,**
**டியன்சின் பசார், பொகவந்தலாவை.**

01. அனுமதிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு இலக்கம் 24 முதல் 45 வரையான கடையறைகளுக்கான கேள்வி விண்ணப்பங்களை முன்வைக்கலாம்.

02. அனுமதிக்கப்பட்ட வரைபடத்தினை அலுவலக நேரத்தில் பிரதேச சபையின் டியன்சின் பிரதான காரியாலயத்தில் பரிசீலிக்கலாம்.

03. ஒரு கேள்விதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட கடையறைகளுக்காக கேள்விகளை முன்வைக்கலாம்.

04. கடையறைகளுக்கான ஆகக்குறைந்த கேள்வித்தொகை பின்வருமாறு:

| கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (ரூ) | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (ரூ) | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| 24 | 2,200,000.00 | 32 | 2,000,000.00 | 40 | 2,075,000.00 |
| 25 | 2,175,000.00 | 33 | 1,975,000.00 | 41 | 2,100,000.00 |
| 26 | 2,150,000.00 | 34 | 1,950,000.00 | 42 | 2,125,000.00 |
| 27 | 2,125,000.00 | 35 | 1,925,000.00 | 43 | 2,150,000.00 |
| 28 | 2,100,000.00 | 36 | 1,900,000.00 | 44 | 2,175,000.00 |
| 29 | 2,075,000.00 | 37 | 1,875,000.00 | 45 | 2,200,000.00 |
| 30 | 2,050,000.00 | 38 | 2,025,000.00 | | |
| 31 | 2,025,000.00 | 39 | 2,050,000.00 | | |

05. ஏற்றுக்கொள்ளப்படும் கேள்வித் தொகையானது கீழ் காணப்படும் விதத்தில் பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டும்.
I. 25% - கேள்வி திறக்கப்படும் நேரத்தில்
II. 50% - நிர்மாணம் 50% நிறைவுறும் வேளையில்
III. 25% - கடையறை கையளிக்கப்படும் வேளையில்

06. அலுவலக நேரத்தில் மீள செலுத்தப்படும் வைப்புப்பணம் ரூபா 50,000.00 மற்றும் மீள செலுத்தப்படாத வைப்புப்பணம் ரூபா 3000.00 விண்ணப்பக் கட்டணம் ரூபா 3000.00 ஆகியவற்றை செலுத்தி கேள்வி விண்ணப்பத்தினை நோர்வூட் பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

07. மேற்படி கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்திய பின்னர் கடையறையினை பெற்றுக் கொள்வதற்காக சபையுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும்.

08. குறிப்பிட்ட காலத்திற்குள் கேள்வி தொகையினை முழுமையாக செலுத்த தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு கடையறை பெற்றுக் கொடுக்கப்படும்.

09. கடையறைகளுக்கான மாதாந்த மதிப்பீட்டு கூலி குறிப்பிட்ட மாதத்தின் 25ம் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும்.

10. ஆகக்குறைந்தது கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 05 வருடங்களின் பின்னர் சம்பந்தப்பட்ட கேள்விதாரர் விலகிக் கொள்ளுமிடத்து கேள்வித்தொகை மீள செலுத்தப்படும். (ஒரே தடவையில் அல்லது தவணை முறையில்)

11. கேள்விப்பத்திரத்தினை முன்வைக்காத மற்றும் கேள்விப்பத்திரத்திற்கு அமைவான கேள்வி தொகையினை செலுத்த தவறும் விண்ணப்பதாரிகளது வைப்புப்பணம் சபைக்கு உரித்தாக்கப்படும்.

12. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் 2022.08.09ம் திகதிக்கு முன்னர் மேற்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் (பொகவந்தலாவை நகரில் நிர்மாணிக்கப்படவுள்ள கடையறைகளை குத்தகைக்கு பெற்றுக்கொள்ளல் கடையறை இல - ….. ) என குறிப்பிடப்படுதல் வேண்டும்.

13. கேள்விப்பத்திரம் முன்வைக்கப்படும் போது நோர்வூட் பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

14. மேலதிக விபரங்களுக்கு மு.ப 9.00 முதல் பி.ப 4.15 வரை தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் - 052-2267678

**கே.கே.ரவி.**
**தவிசாளர்,**
**நோர்வூட் பிரதேச சபை,**
**டியன்சின் பசார்,**
**பொகவந்தலாவை.**

**25.07.2022 ம் நாள்,**
**நோர்வூட் பிரதேச சபை அலுவலகத்திலிருந்து**

# பெறுகை அறிவித்தல்

## விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் தம்புள்ள ஹோட்டல் பயிற்சிப் பாடசாலைக்கு 2022 செப்டெம்பர் மாதம் 01ஆம் திகதி முதல் 2023 ஜனவரி 31ஆம் திகதி வரை சமைத்த உணவு பானங்களை வழங்குவதற்காக தேசிய போட்டி ரீதியில் கேள்வி கோரல் இலக்கம் - 03

தேசிய இளைஞர் படையின் தம்புள்ள ஹோட்டல் பாடசாலைக்கு 2022-09-01 முதல் 2022-01-31ஆம் திகதி வரையான காலத்திற்கு சமைத்த உணவு பானங்களை வழங்குவதற்காக தகைமை வாய்ந்த உணவு வழங்குநர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் நடைமுறையின் பிரகாரம் தேசிய படையணி பெறுகைக் குழுவின் (மேல்நிலை) தலைவரினால் 2022-07-27ஆம் திகதி வரை இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | நிலையம் | பயிற்சி பெறுநர்களின் எண்ணிக்கை | மாகாணம் | நிலையப் பொறுப்பதிகாரியின் பெயர் | முகவரி | தொலைபேசி இல. |
|---|---|---|---|---|---|---|
| 1 | தம்புள்ளை ஹோட்டல் பயிற்சிப் பாடசாலை | 275 | மத்திய | லெப்டினன் கர்னல் ஏ. பி. லியனகே | இனாமலுவ, தம்புள்ள | 066-2286177 |

1. 2021-01-01ஆம் திகதியின் பின்னர் பெற்றுக்கொண்ட சமைத்த உணவு பானங்களை வழங்குதல் தொடர்பாக ஆகக் குறைந்தது ஒரு வருட அனுபவத்தை உறுதி செய்வதற்கு குறித்த விலைமனுதாரரினால் உண்மைப் பிரதியென உறுதிப்படுத்தப்பட்ட ஆவணமொன்றின் புகைப்படப் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

   **கேள்விகளைச் சமர்ப்பிக்கும் போது சமைத்த உணவு பானங்கள் வழங்குவதற்கான இயைபான பதிவு உள்ளதென்பதை உறுதிப்படுத்துவதற்கான பின்வரும் ஆவணங்களில் ஒன்றை உண்மைப் பிரதியென உறுதி செய்யப்பட்ட புகைப்படப் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.**

   i) **பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வியாபாரப் பதிவுச் சான்றிதழ் அல்லது**

   ii) **கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கூட்டிணைப்புச் சான்றிதழ் மற்றும் அதன் சட்டவாக்கம்** (Article Of Association)

   iii) **2022ஆம் வருடத்திற்காக உள்ளூராட்சி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட வியாபார அனுமதிப்பத்திரம்**

2. தம்புள்ள ஹோட்டல் பயிற்சிப் பாடசாலைக்கு உணவு பானங்கள் வழங்குவதற்கு இயைபான ஒரு விலைமனுப் படிவத்தின் பொருட்டு மீளளிக்கப்படாத 5,000.00 ரூபா விலைமனுக் கட்டணத்தை தேசிய இளைஞர் படையணியின் கணக்குப் பிரிவின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவிற்குச் சமர்ப்பித்து 2022-07-27ஆம் திகதி முதல் 2022-08-17ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான கடமை நாட்களில் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுப் படிவங்களை 2022-08-18ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு (மேல் நிலை), தேசிய இளைஞர் படையணி தலைமையகம், இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது தேசிய இளைஞர் படையணி தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடல் வேண்டும். 2022-08-18ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

4. 2022-08-18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் அறிவிக்கப்படாமலே நிராகரிக்கப்படும்.

5. விலைமனுதாரரினால் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் 260,000.00 ரூபா பெறுமதிக்குச் சமமான வகையில் 2022-08-18ஆம் திகதி அல்லது அதற்கு முந்திய திகதி யொன்றிலிருந்து 2022-11-19ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் பணிப்பாளர் / தலைவர், தேசிய இளைஞர் படையணி தலைமையகம், இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07 எனும் பெயரில் விலைக்கோரல் பிணை முறியொன்றைப் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்.

6. இது தொடர்பான முன்னோடி புரிந்துணர்வு கலந்துரையாடல் 2022-08-08ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

7. இது பற்றிய மேலதிக விபரங்கள் தேவையானால் 011-2-690 294 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தேசிய இளைஞர் படையணி - பெறுகைப் பிரிவு தலைவரைத் தொடர்பு கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு (மேல் நிலை),**
**தேசிய இளைஞர் படையணி தலைமையகம்,**
**இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07.**
**2022-07-27.**

# நீர் வழங்கல் அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல்

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலைமனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | **வழங்கல் கேள்விகள்** | | | |
| **01** | மேற்கு உற்பத்தி பிராந்தியத்திற்கு ஆய்வுகூட இரசாயனங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல : **RPC/WP/G/WPR/LAB/SPF/2022/37** | 12,500/-+ VAT ** | ரூபா 178,000/- | இதனையொத்த ஒப்பந்தங்களில் அனுபவம் வாய்ந்த நிறுவனங்கள் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 17.8 மில்லியன் | பிரதிப் பொது முகாமையாளர் (மேற்கு – உற்பத்தி) அலுவலகம், தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம். Tele:0112418532 Fax:0112549199 | 17/08/2022 பி.ப. 2.00 |
| **02** | பியகம நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கு ஆய்வுகூட இரசாயனங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஒப்பந்த இல: **RPC/WP/G/BIY/LAB/SPF/2022/45** | 12,500/-+ VAT ** | ரூபா 110,000/- | இதனையொத்த ஒப்பந்தங்களில் அனுபவம் வாய்ந்த நிறுவனங்கள் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 11.0 மில்லியன் | பிரதிப் பொது முகாமையாளர் (மேற்கு – உற்பத்தி) அலுவலகம், தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம். Tele:0112418532 Fax:0112549199 | 17/08/2022 பி.ப. 2.00 |
| **03** | மேற்கு உற்பத்தி பிராந்தியத்திற்கு ஆய்வுகூட கண்ணாடிப் பொருட்கள் வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல: **RPC/WP/G/WPR/LAB/SPF/2022/38** | 4,000/-+ VAT ** | ரூபா 46,000/- | இதனையொத்த ஒப்பந்தங்களில் அனுபவம் வாய்ந்த நிறுவனங்கள் | 4.6 மில்லியன் | பிரதிப் பொது முகாமையாளர் (மேற்கு – உற்பத்தி) அலுவலகம், தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம். Tele:0112418532 Fax:0112549199 | 17/08/2022 பி.ப. 2.00 |
| | | | | **M&E கேள்விகள்** | | | |
| **04** | பேராறு உள்ளீர்ப்பில் உள்ள Algea Controlஇற்கு Sonicator கருவியை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் ஒப்படைத்தல் ஒப்பந்த இல: **RSC/N/DGM/RH/Supply, Installation/ Sonicator/Peraru Intake/2021/013R** | 12,500/- +VAT ** | ரூபா 200,000/- | Alega Control க்கு Sonicator ஐ வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 13.36 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. Tele:024-2225719/ 024-2227340 Fax:024-2225088/ 024-2227341 கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-08-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் வீதி, வவுனியா தேநீவவ சபையில் இடம்பெறும். | 24/08/2022 பி.ப. 2.00 |
| | | | | **சேவைக் கேள்விகள்** | | | |
| **05** | புத்தளம் மாவட்ட நீர் வழங்கல் திட்டங்களுக்கு நீர்மானி வாசித்தல், நீர்க்கட்டண விலைப்பட்டியல்களை விநியோகித்தல் மற்றும் ஏனைய வாடிக்கையாளர் சார்ந்த வேலை சேவைகள் ஒப்பந்த இல:**RSC(NW)/M(O&M)-PUT/SER/O&M /PUT/ 2022/15** | 12,500/- +VAT ** | ரூபா 167,000/- | வருமான உதவியாளர் சேவைகளை வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (COB) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 16.72 மில்லியன் | பிஔநி (வடமேல்) அலுவலகம், தேநீவவச, தம்புள்ளை வீதி, குருநாகல் Tele: 037-2223158 Fax : 037-2230086 கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-08-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு புத்தளம் -முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறும். | 10/08/2022 பி.ப. 2.00 |
| **06** | சிலாபம், காக்காப்பள்ளிய, தங்கொட்டுவ மற்றும் நாத்தாண்டிய நீர் வழங்கல் திட்டங்களுக்கு தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல: **RSC(NW)/M(O&M)-PUT/SER/ O&M/CHI/2022/17** | 12,500/- +VAT ** | ரூபா 131,000/- | தொழிலாளர் சேவைகளை வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (COB) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 13.14 மில்லியன் | பிஔநி (வடமேல்) அலுவலகம், தேநீவவச, தம்புள்ளை வீதி, குருநாகல் Tele: 037-2223158 Fax : 037-2230086 கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-08-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு புத்தளம் -முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறும். | 10/08/2022 பி.ப. 2.00 |
| **07** | புத்தளம் மற்றும் ஆனமடுவ முகாமையாளர் அலுவலகங்களுக்கு தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல: **RSC(NW)/M(O&M)-PUT/SER/ O&M/ PUT/2022/18** | 12,500/- +VAT ** | ரூபா 123,000/- | தொழிலாளர் சேவைகளை வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (COB) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 12.26 மில்லியன் | பிஔநி (வடமேல்) அலுவலகம், தேநீவவச, தம்புள்ளை வீதி, குருநாகல் Tele: 037-2223158 Fax : 037-2230086 கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-08-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு புத்தளம் -முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறும். | 10/08/2022 பி.ப. 2.00 |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

# ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறிய சிறுபான்மை சமூகங்களை மீள வருமாறு அழைப்பு

ஆப்கானிஸ்தா னிலிருந்து வெளியேறிய சகல சிறுபான்மை சமூகங்களையும் மீளவும், வருமாறு தலிபான் அரசாங்கம் அறிவித்துள்ளது. தலைநகர் காபுலில் ஜூன் 18 இல், சீக்கியர்களின் வழிபாட்டுத் தலத்தில் நடாத்தப்பட்ட தாக்குதலையடுத்து, இங்கிருந்த சீக்கியர்கள் மற்றும் இந்துக்கள் உட்பட சிறுபான்மையினர் வெளியேறினர்.

இருப்புக்கான அச்சத்தையடுத்தே அங்கிருந்த சிறுபான்மை சமூகங்கள் வெளியேறின.

தற்போது நிலைமைகள் சீராக்கப்பட்டு,பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதால் சிறுபான்மையினர் சகலரையும் மீள வருமாறு தலிபான் அரசு அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபுலிலுள்ள சீக்கிய வழிபாட்டு தலத்தில் பயங்கரவாத தாக்குதல் நடாத்தப்பட்டது. இதனையடுத்து ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சின் உயர்மட்ட குழு, குருத்வாராவுக்குச் சென்று காயம் அடைந்தவர்களுக்கு ஆறுதல் தெரிவித்ததுடன், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கலும் தெரிவித்தது. சேத விபரங்களை கணக்கிட தொழில்நுட்ப குழுவும் அமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆப்கான் அரசு 7.5 மில்லியன் நிதியை குருத்வாரா சீரமைப்புக்கு வழங்குவதாகவும் அறிவித்தது. ஐ,எஸ்,கேபி பயங்கரவாத குழுவினரே காபுலிலுள்ள பர்வான் குருத்வாராவில் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் ஒரு சீக்கியர் உட்பட இரண்டு பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் அரசின் உயர்மட்ட அதிகாரி, (24) இந்து மற்றும் சீக்கிய கவுன்சில் பிரதிநிதிகளுடன் ஆலோசனையும் நடத்தினார்.

# கொங்கோவிலுள்ள ஐ.நா. அமைதி படைகளை வெளியேறுமாறு ஆர்ப்பாட்டம்




கொங்கோவிலுள்ள ஐக்கிய நாடுகள் அமைதிப் படைகளை வெளியேறுமாறு, கிழக்கு நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அங்குள்ள ஐ,நா அலுவலகச் செயலகத்துக்குள் நுழைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், அரச சொத்துக்களுக்கு தீ வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த (25) திங்கட்கிழமை இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

நூற்றுக்கும் அதிகமான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஐ.நா.அலுவலகத்துக்குள் நுழைந்து அங்கிருந்த கணினிகள், ஆவணங்கள் மற்றும் பெறுமதியான பொருட்களை தீயிட்டுக் கொளுத்தினர். அங்கு, பணியிலிருந்த அதிகாரிகளை வெளியேற்ற அவசரமாக ஹெலிகொப்டர்கள் தரையிறக்கப்பட்டன. கொங்கோவின், கிழக்கு நகரான கோமாவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

# தாயகம் செல்லும் 75 வருட கனவை நனவாக்கிய இந்தியப் பெண் ரீனா வர்மா



பாகிஸ்தானின் ராவல்பிண்டி நகரிலுள்ள தனது வீட்டிற்குச் செல்ல 75 ஆண்டுகளாகக் கனவு கண்ட தொண்ணூறு வயதுடை ரீனாவர்மா, தனது கனவை நனவாக்கியுள்ளார்.

தனது நீண்ட நாள் அவாவை நிறைவேற்ற புனேவிலிருந்து ரீனாவர்மா பாகிஸ்தானின் ராவல்பிண்டி நகருக்கு பயணமானார்.

கல்லூரி சாலையிலுள்ள அவரது வீட்டை நோக்கிச்செல்லும்போது அவருக்குப் பெரும் வரவேற்பு கிடைத்தது.

அங்குள்ள மக்கள் அவரது வருகையை மேளதாளங்களுடன் வரவேற்றுக் கொண்டாடினர்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு சுதந்திர நாடுகளை உருவாக்க வழிவகுத்த பிரிவினைக்குச் சில வாரங்களுக்கு முன்பு, 1947ஆம் ஆண்டில் வர்மாவின் குடும்பம் ராவல்பிண்டியை விட்டு வெளியேறியது.

அப்போது, மதக் கலவரங்கள் வெடித்ததால், இலட்சக்கணக்கான மக்கள் எல்லையைக் கடக்க தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். இதன்போது, குழப்பமும் ரத்தக்களரியும் ஏற்பட்டது.

இவ்வாறு வந்த ரீனா வர்மா, தனது தாயகத்துக்கு திரும்பச் சென்றமை அவரை மகிழ்ச்சிப்படுத்தியுள்ளது.

# உலக உணவு நெருக்கடிக்கு ரஷ்யா காரணமென்பதை ஏற்க முடியாது



உலகளாவிய உணவு நெருக்கடிக்கு ரஷ்யாதான் காரணம் என்று கூறப்படுவதை, அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர், செர்கே லாவ்ரோவ், மறுத்துள்ளார்.

எகிப்து தலைநகர் கெய்ரோவில், அரபு லீக் தூதர்களிடம் அவர் ஆற்றிய உரையின்போது, இந்த மறுப்பை வெளியிட்டார்."உலக உணவுப் பாதுகாப்பில் பொருளாதாரத் தடைகளின் தாக்கம் குறித்த உண்மையை மேற்கத்திய நாடுகள் திரித்துக் கூறுவதாக சுட்டிக்காட்டிய அவர்,

மேலும், மேற்கத்திய நாடுகள் தங்கள் ஆதிக்கத்தை மற்றவர்கள் மீது திணிக்க முயற்சிப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

உக்ரைன், ரஷ்யா போரால் ஏற்பட்ட தானியப் பற்றாக்குறையால், அரபு நாடுகள் மற்றும் ஆப்ரிக்காவின் பெரும் பகுதி மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சனிக்கிழமையன்று உக்ரைனின் ஒடேசா துறைமுகத்தை ரஷ்யா தாக்கியது. இதனால், தானிய ஏற்றுமதிகள் நிறுத்தப்பட்டன. இந்த ஏற்றுமதியை, மீண்டும் தொடங்கும் விதமாக ஒரு முக்கிய ஒப்பந்தம் வெள்ளிக்கிழமை கையெழுத்திடப்பட்டது.

அத்துடன், போரால் உருவான கோபத்துக்கு மத்தியில், தங்களுக்கான (ரஷ்யாவுக்கான) ஆதரவைத் திரட்ட மூன்று ஆபிரிக்க நாடுகளுக்குச் செல்லவுள்ளதாகவும் வெளியுறவுத்துறை அமைச்சர் லாவ்ரோவ்.குறிப்பிட்டார்.

"ரஷ்யா மீது தடைகளை விதிப்பதிலுள்ள 'தீவிரத்தன்மை' ஒரு எளிய முடிவைக் குறிக்கிறது. "இது உக்ரைனைப் பற்றியது அல்ல, உலக ஒழுங்கின் எதிர்காலம் பற்றியது" என்றும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் பேசினார்.

முன்னதாக, லாவ்ரோவ், எகிப்திய வெளியுறவு அமைச்சர் சமே ஷோக்ரியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

எகிப்துக்கும் ரஷ்யாவுக்கும் இடையே முக்கியத்துவம் வாய்ந்த பிணைப்புகள் உள்ளன. குறிப்பாக, கோதுமை, ஆயுதங்கள் மற்றும் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் ரஷ்யாவுக்கு வந்ததாகவும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.


## கொழும்பு மாநகர சபை

### விலைமனு செல்லுபடிக் காலத்தை திருத்தி அமைத்தல்

2022.07.25 அன்று பிரசுரிக்கப்பட்ட CPD 16/1629/2022 என்ற பெறுகை அறிவித்தலில், விலைமனுக்கோரல் அறிவுறுத்தல்களின் 'இ' இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயமானது பின்வருமாறு திருத்தி அமைக்கப்படுதல் வேண்டும்.

நிபந்தனைகளற்ற உடனடியாகப் பெறக்கூடிய விலைமனு உத்தரவாதம்/ விலைமனுப்பிணை/ விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்திலிருந்து 150 நாட்களுக்குச் செல்லுபடியாகுதல் வேண்டும். விலைமனு உத்தரவாதம்/ விலைமனுப்பிணை ஆகியன 2023.01.14 வரையும் விலைமனுக்கள் 2022.12.15 வரையும் செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 118, புதிய எல்பிடிய, கெலிஓய இலங்கையில் வசிக்கும் மற்றும் இல. 8, பெய்ரன் வீதி, ஏலே, ரிடின் இங்கிலாந்து, லண்டன், ஆர் ஜீ 6 ஐ ஈ பி, இங்கிலாந்தில் தற்போது வசிக்கும் முஹம்மது சரீபுதீன் முஹம்மட் ஹலீம் ஆகிய நான் இல. 118, புதிய எல்பிடிய, கெலிஓய இல் வசிக்கும் முஹம்மது சரீபுதீன் முஹம்மத் சித்தீக் (தே. அ.அ.இல: 611254350V) என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட இலங்கையின் ஐக்கிய இராச்சியத்திற்கான தூதுவராலயத்தின் உயர்ஸ்தானிகர் மூலம் 2010.06.07ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட, நாட்பதிவேட்டு விஷேட அற்றோணித் தத்துவப் பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாசையின் பேரிலும் 2020.07.18ஆம் திகதி தொடக்கம் இரத்து செய்வதாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் அதன் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

## விலை கோரலுக்கான அழைப்பு

### மேல் மாகாண சபை

### பொறியியல் பணியகம்

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக இயைபுடைய பிராந்தியப் பொறியியலாளர் பெறுகைக் குழுத் தலைவரினால் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. I. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்படுவர். 04/2016(iii)ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) மொத்தப் பெறுகையின் பெறுமதி 50 மில்லியனுக்குக் குறைவாக இருப்பதனால் மாகாண முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
   II. 03/2020(i)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம், ''அரசுரிமை தொழில் முயற்சி (SOE) விலைகளைக் கோருகையில் ஐந்து வீதமான (5%) முன்னுரிமை வழங்கப்படும்.''
3. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வெற்றிகரமான விலைகூறுநர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்களாக இருத்தல் ஆகாது என்பதுடன் விலைமனு ஆவணத்தின் பிரகாரம் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

| (1) தொ. இல. | (2) ஒப்பந்தத்தின் இலக்கம் | (3) வேலையின் பெயர் | (4) 03ஆம் இலக்க பொது ஒப்பந்தத் தேவைப்பாடு | (5) CIDA பதிவு | (6) மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | (7) விலைமனுப் பிணை / விலைமனுப் பிணையின் செல்லுபடியாகும் காலம் | (8) விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| வளிச்சீராக்கிகளுக்கான பெறுகை | | | | | | | |
| 1 | WP/PU/CON/22/113 | களுத்துறை - புதிய மாவட்டப் பொறியியல் அலுவலகத்திற்கு 05 எண்ணிக்கையான **24000 BTU/Hr,** 2 எண்ணிக்கையான **18000 BTU/Hr,** 2 எண்ணிக்கை **12000 BTU/Hr Wall Mounted Split Type** வளிச்சீராக்கி அலகுகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல் | இல்லை | **EM 3** அல்லது அதற்கு மேல் | **1,000.00** | ரொக்கப் பண வைப்பு - ரூபா **20,000.00** | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் களுத்துறை, சுமங்கள வீதி, களுத்துறை வடக்கு. தொலைபேசி இல . 034-2237349 |
| நிர்மாணத்திற்கான பெறுகை | | | | | | | |
| 2 | WP/PU/CON/22/114 | மேமா/பிலி மகளிர் உயர் பாடசாலையின் (உ/த வர்த்தகம் - அதி ஹெட்டி கட்டிடம்) 110'×25' இரண்டு மாடிக் கட்டிடத்தில் கூரை மற்றும் கட்டமைப்புத் திருத்தவேலைகள்<br>மேமா/பிலி மகளிர் உயர் பாடசாலையின் (உ/த வர்த்தகம் - அதி ஹெட்டி கட்டிடம்) 110'×25' இரண்டு மாடிக் கட்டிடத்தில் கூரை மற்றும் கட்டமைப்புத் திருத்தவேலைகள் | ஆம் | C7 மற்றும் C6 | 2,500.00 | விலைமனுப் பிணை முறி - ரூபா 57,000.00<br>ரொக்கப் பண வைப்பு - ரூபா 28,500.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், இரத்மலானை, இல. 25, மாளிகாவ வீதி, இரத்மலானை. தொலைபேசி இல. 0112-622517 |
| 3 | WP/PU/CON/22/115 | மேமா/பிலி சென் ஜோசப் மகளிர் உயர் பாடசாலையின் இரண்டு மாடி 55'×40' மனையியற் கல்விக் கட்டிடத்தில் கூரை மற்றும் ஏனைய திருத்தவேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 12,500.00 | |
| 4 | WP/PU/CON/22/116 | மேமா/கொ ரத்னாவளி மகளிர் வித்தியாலயத்தின் 100'×20' மூன்று மாடிக் கட்டிடத்தில் கூரை மற்றும் கட்டமைப்பு திருத்தவேலைகள் | ஆம் | C6 மற்றும் C5 | 4,000.00 | விலைமனுப் பிணை முறி - ரூபா 200,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், இல. 151/4/2/1, மாளிகாவத்த பிளேஸ், மாளிகாவத்தை, கொழும்பு-10. தொலைபேசி-: 011-2447773 |
| 5 | WP/PU/CON/22/117 | மேமா/கொ மகாமத்திய மகாவித்தியாலயத்தின் பாடசாலைக் கட்டிடத்தை விஞ்ஞானக் கல்லூரியாக மாற்றுவதற்குத் தேவையான கட்டிடத்தின் மீள்நிர்மாணம் மற்றும் புதுப்பித்தல் வேலைகள் | ஆம் | C6 மற்றும் C5 | 3,500.00 | விலைமனுப் பிணை முறி - ரூபா 130,000.00 | |
| 6 | WP/PU/CON/22/118 | மேமா/ஹொர/பெல்பொல கனிஷ்ட வித்தியாலயத்தின் 110'×20' கூரையுடனான பிரதான மண்டபக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 17,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஸ்ரீ மகா விஹார வீதி, பாணந்துறை. T.P -: 038-2234774 |
| 7 | WP/PU/CON/22/119 | மேமா/நீர் பஞ்ஞானந்த பிரிவெனா வித்தியாலயத்தின் 90x20 தேவானம்பியதிஸ்ஸ மண்டபத்தின் கூரை திருத்தவேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 12,500.00 | நீர்கொழும்பு பிரதேச பொறியியலாளர் அலுவலகம், இல. 75, லூவிஸ் பிளேஸ், நீர்கொழும்பு. தொலைபேசி-: 011-2447773 |
| 8 | WP/PU/CON/22/120 | மேமா/நீர் முகலன்கமுவ பண்டாரநாயக்க மகாவித்தியாலயத்தின் 100x20 ஒற்றை மாடிக் கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 6,000.00 | |
| 9 | WP/PU/CON/22/121 | மேமா/நீர் கட்டுவாப்பிட்டிய சென் செபஸ்தியன் மகா வித்தியாலயத்திலுள்ள 100'×20' கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 12,500.00 | |
| 10 | WP/PU/CON/22/122 | மேமா/நீர் கண்டாவள சென் ஜோசப் கனிஷ்ட வித்தியாலயத்திலுள்ள 80'×20' கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 12,500.00 | |
| 11 | WP/PU/CON/22/123 | மேமா/நீர் தோப்புவ சென் பிலிப்பெனரிஸ் கனிஷ்ட வித்தியாலயத்திலுள்ள 80'×20' கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 12,000.00 | |
| 12 | WP/PU/CON/22/124 | மேமா/நீர் ஆண்டியம்பலம மகளிர் பிரிவெனா வித்தியாலயத்திலுள்ள 70'×20' கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 10,000.00 | |

04. இதில் ஆர்வம் கொண்டுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை அட்டவணையின் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுடைய பொறியியல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அலுவலக நேரத்தினுள் இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீசித்துப் பார்க்கலாம்.
05. மீளளிக்கப்படாத கட்டணத்தை (அட்டவணையின் 06ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) 2022-07-27ஆம் திகதி முதல் 2022-08-09ஆம் திகதி வரை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 03.00 மணிக்கிடையில் மேல் மாகாணம் - மாகாண சபைக்குச் கட்டிடப் பணிப்பாளருக்குச் செலுத்தியதன் பின் இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அவர்களுக்கு (அட்டவணையின் 08ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதி முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
06. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை வெவ்வேறான கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்திட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு இரு நகல்களில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு (அட்டவணையின் 08ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) 2022-08-10ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து அவ்வேளையிலேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. சகல விலைமனுக்களுடனும் விலைமனுப் பிணை முறி அல்லது ரொக்கப் பண வைப்பு பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (அட்டவணையின் 07ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்). செல்லுபடிக் காலமானது விலைமனு ஆவணத்தின் பிரகாரமாகவிருத்தல் வேண்டும்.
08. விலைமனுதாரர்கள் 1987இன் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். (அட்டவணையின் 05ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்)

**பெறுகைப் பிரிவு,**
**பொறியியல் பணியகம் (மே.மா),**
**5ஆம் மாடி, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**
**2022-07-27**
**தொலைபேசி: 0112-092504, தொலைநகல்: 0112-092505**

# பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் 231 ஓட்டங்கள்



இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், காலியில் நேற்று முன்தினம் ஆரம்பித்த இரண்டாவது டெஸ்டின் நேற்றைய மூன்றாம் நாளில் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 231 ஓட்டங்களை பாகிஸ்தான் பெற்றுக் கொண்டது. இலங்கை பந்து வீச்சாளர்களின் துல்லியமான பந்து வீச்சில் ஓட்டங்கள் பெற்றுக் கொள்வதில் பாகிஸ்தான் அணிக்கு சிரமங்கள் ஏற்பட்டன.

நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன் அடிப்படையில் முதல் இனிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து இலங்கை அணி 378 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.




பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி அதன் முதல் இனிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து 231 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. **ஸ்கோர் விவரம்:**

***இலங்கை: 378:*** *தினேஷ் சந்திமால் 80, நிரோஷன் டிக்வெல்ல 51, ஒஷாட பெர்ணாண்டோ 50, அஞ்சலோ மத்தியூஸ் 42, திமுத் கருணாரத்ன 40, ரமேஷ் மெண்டிஸ் 35, தனஞ்சய டி சில்வா 33 ஓட்டங்கள்.* ***பந்துவீச்சு:*** *நசீம் ஷா 3/58, யசீர் ஷா 3/83, மொஹமட் நவாஸ் 2/80, நௌமன் அலி 1/64)*



***பாகிஸ்தான்: 231:*** *அக்ஹா சல்மான் 62, இமாம்உல்ஹக் 32, யசீர் ஷா 26, ஹஸன் அலி 21 ஓட்டங்கள்.* ***பந்துவீச்சு:*** *ரமேஷ் மெண்டிஸ் 5/47, பிரபாத் ஜெயசூரிய 3/80 தனஞ்சய டி சில்வா 1/15, அசித பெர்ணாண்டோ 1/62)*



## மலேசியா பயணமாகும் செக்வோல் வீரர் சபீர் அலி

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

இலங்கையின் செக்வோல் (Tchoukball) தேசிய அணியை பிரதிநிதித்துவப்படுத்தி அடுத்த மாதம் 02ஆம் திகதி மலேசியா நாட்டில் நடைபெறவுள்ள 9ஆவது ஆசிய பசுபிக் செக்வோல் சம்பியன் போட்டியில் கலந்து கொள்வதற்காக அக்கரைப்பற்றைச் சேர்ந்த செக்வோல் வீரர் எம்.எச்.சபீர் அலி பயணமாகின்றார். அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) விளையாட்டு பயிற்றுவிப்பாளரான இவர், மெய்வல்லுனர் போட்டிகளிலும் தேசிய ரீதியில் சாதனை படைத்து கிழக்கு மாகாணத்திற்கு பெருமை சேர்த்த வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
44th
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

**SLT- MOBITEL** நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 30-07-2022 இல. 18




# ஸ்கொட்லாந்து கிரிக்கெட் சபை இராஜினாமா; சுதந்திர விசாரணை அறிக்கையின் எதிரொலி

ஸ்கொட்லாந்து கிரிக்கெட் சபை நிறுவனரீதியான இனவாதத்தை வெளிப்படுத்தி வருவதாக, சுதந்திர விசாரணை அறிக்கையொன்றில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த விசாரணை அறிக்கை நேற்று முன்தினம் (25) வெளியாகியிருந்த நிலையில், இதற்கு முதல் கடந்த ஞாயிற்றுக்கிழமை (24) ஸ்கொட்லாந்து கிரிக்கெட் சபையின் இடைக்கால பிரதம நிறைவேற்று அதிகாரி கோர்டன் ஆர்தர் மற்றும் கிரிக்கெட் சபையின் உறுப்பினர்கள் தங்களுடைய பதவிகளை இராஜினமா செய்துள்ளனர்.




கடந்த 2015 உலகக் கிண்ணத்தின் போது நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டதுடன், பின்னர் மீண்டும் விளையாடாத முன்னாள் ஸ்காட்லாந்து பந்துவீச்சாளர் மஜித் ஹக் இனவாத ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக குற்றம் சாட்டியிருந்தார். அதேநேரம், முன்னாள் வீரர் கசீம் ஷெய்க் மற்றும் அஷீம் ரபீக் ஆகியோரும் ஸ்கொட்லாந்து கிரிக்கெட் சபையின் நிறுவன ரீதியான இனவாதத்துக்கு உள்ளாகியிருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த நிலையில், ஸ்கொட்லாந்து கிரிக்கெட் சபையின் நிறுவனரீதியான இனவாத செயற்பாடுகள் குறித்து விசாரணை செய்த ஸ்காட்லாந்தின் தேசிய விளையாட்டு நிறுவனமான *Plan4Sport*, ஸ்கொட்லாந்து கிரிக்கெட் சபை நிறுவன ரீதியான இனவெறி தாக்குதல்களை மேற்கொண்டிருப்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, ஸ்கொட்லாந்து கிரிக்கெட் சபையை சார்ந்த 1000 பேரிடம் எடுக்கப்பட்ட வாக்குமூலங்களின் மூலம், 15 வெவ்வேறு நபர்கள், இரண்டு கழகங்கள் மற்றும் ஒரு பிராந்திய கிரிக்கெட் சபைகளுக்கு எதிரான 31 இனவெறி குற்றச்சாட்டுகள் உட்பட, மேலதிக விசாரணைக்கு 68 தனிப்பட்ட குற்றச்சாட்டுகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

# யாழ். மாவட்ட ஆணழகன் போட்டி



**யாழ். விசேட நிருபர்**

யாழ். மாவட்ட உடற்கட்டமைப்பு மற்றும் விருத்தி சங்கத்தினால் நாடத்தப்பட்ட நான்காவது வடமாகாண ஆணழகன் போட்டி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் சனிக்கிழமை இப்போட்டி இடம்பெற்றது. போட்டியில் வடமாகாணத்தை சேர்ந்த போட்டியாளர்கள் பல்வேறு பிரிவுகளில் கலந்து கொண்டனர்.



## இலங்கை கால்பந்தாட்ட சம்மேளன தலைவர் தங்க கிண்ணப் போட்டி;

# அக்கரைப்பற்று ஹிஜ்றா சம்பியன்

**அக்கரைப்பற்று மத்திய நிருபர்**

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளன தலைவர் தங்க கிண்ணப்போட்டியில் ஹிஜ்றா விளையாட்டு கழகம் சம்பியன் பட்டத்தை வென்றது. சுப்பர் சொனிக் விளையாட்டு கழகம் இரண்டாமிடத்தை பெற்றுக் கொண்டது.



அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தங்க கிண்ண போட்டியில் ஹிஜ்றா அணி 2.0 எனும் அடிப்படையில் சுப்பர் சொனிக் விளையாட்டு கழகத்தை வெற்றி கொண்டு சம்பியனானது.

தகுதிகாண் அடிப்படையில் இடம்பெற்ற போட்டிகளில் வெள்ளிக்கிண்ணத்தை சூ சிட்டி விளையாட்டு கழகமும், இரண்டாம் இடத்தை இறக்காமம் ஐ.ஆர்.எப்.சி அணியும் சுவீகரித்துக் கொண்டன.

இந்த போட்டிகளுக்கு இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளன தலைவர் ஜஸ்வர் உமர் அதன் பொருளாளர் செலர், அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் அதாஉல்லா அகமட் சகி உள்ளிட்ட பல அதிதிகள் கலந்து கொண்டு கிண்ணங்களையும், நினைவுச் சின்னங்களையும் வழங்கி வைத்தனர்..

இதன் போது அக்கரைப்பற்று பிராந்திய உதைப்பந்தாட்ட வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த பல முன்னாள் சிரேஷ்ட வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

# உலமாக்கள், ஹாபிழ்களுக்கிடையேயான கிரிக்கெட் சுற்றுப்போட்டி

**பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்**

உலமாக்கள் மற்றும் ஹாபிழ்களுக்கிடையே நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பாலமுனை மஹாசி அணி 2022 சம்பியன் கிண்ணத்தை தனதாக்கி கொண்டது. பாலமுனை அல் ஹிக்மா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இக்கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அக்கரைப்பற்று அஸ்திகா அணி, சம்மாந்துறை அந்நாஜாத் அணி, பாலமுனை ஸஹ்வா அரபுக் கல்லூரி மற்றும் ஒலுவில் அஹிப்பா ஆகிய அணிகள் கலந்து கொண்ட உலமாக்கள் ஹாபிழ்களுக்கிடையிலான இந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பாலமுனை மஹாஸி அணி சாம்பியன் கிண்ணத்தை வெற்றி கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜுலை மாதம் 27ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.